பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 30 வியாழக்கிழமை 15.08.2024 கதிர் 281

### 13ஆம் திருத்தச் சட்டத்தின்

# அதிகாரங்கள் திரும்பப்பெறப்படா என்கிற உத்தரவாதம் வேண்டும்

### ஜனாதிபதியிடம் சுமந்திரன் நேற்று வலியுறுத்து

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் பறிக்கப்பட்ட அதிகாரங்களைத் திருப்பித்தருவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வாக்குறுதியளித்திருக்கும் நிலையில், அவ்வாறு வழங்கப்படும் அதிகாரங்கள் மீண்டும் பறிக்கப்படாதவாறு அரசியலமைப்பு மாற்றியமைக்கப்படவேண்டும் எனவும், எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலுக்கு முன்னதாக அதற்குரிய உத்தரவாதத்தை வழங்கவேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை நேற்று பகல் 11.30 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்துப் பேசினார் தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன். இந்தச் ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதி வேட்பாளர்களான சஜித், அனுர, ரணில் ஆகியோருக்கு இடையில்தான் இந்த ஜனாதிபதித் தேர்தலில் முக்கியமான மும்முனைப் போட்டி இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும் நாமலும் களத்தில் தீவிரமாக இறங்கிச் செயற்படுவதில் ஆர்வத்துடன் இருக்கிறார். நேற்றிரவு ஊடகப் பிரபலங்களை அவர் கொழும்பு ஹில்ட்டன் மற்றும் கிங்ஸ்பெரி ஹோடல்களில் இரவு விருந்துடன் சந்தித்துப் பேசினார்.

பேசினார் என்றால் என்ன ஊடகங்களின் ஆதரவைப் பெறுவதற்காக அவர்களுக்கு 'ஐஸ்' வைக்கும் வழக்கமான பாணிதான் இதுவும். நக்குண்டார் நாவிழந்தார் என்ற அரசியல்வாதிகளின் அறதப் பழசான எண்ணம் நாமல் வரைக்கும் தொடர்வது சாபக்கேடு.

நாமல் மட்டுமல்ல ரணிலும்கூட அண்மையில் ஊடகவியலாளர்களைச் சந்தித்திருந்தார். அவர் இன்னும் ஒருபடி மேலே போய் பிராந்தியங்களில் பணியாற்றும் ஊடகவியலாளர்களை எல்லாம் கொழும்புக்கு அழைத்து விருந்தும் கொடுத்து அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டார். ரணிலைச் சந்திக்கலாமா வேண்டாமா என்பதில் பொதுக் கட்டமைப்புக் ☞ 2

## ரிஷாத், சம்பிக்கவும் சஜித்துக்கே ஆதரவு

வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பது என்று இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் முடிவு செய்துள்ளார். அதேபோன்று நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவும் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து அவருடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் கைச்சாத்திட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் சஜித்தை ஆதரிப்பது என்ற தனது முடிவை ரிஷாத் பதியுதீன் நேற்றுக் கொழும்பில் அறிவித்தார். அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் உயர் பீடம் கூடி ஜனாதிபதித் தேர்தலில் சஜித்தை ஆதரிப்பது என்கிற இந்தத் தீர்மானத்தை எடுத்தது என்றும் அவர் தெரிவித்தார்.

தேர்தலில் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் ☞ 8

## மனுஷவுக்குப் பதிலாக பண்டாகொட நியமனம்

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து கட்சி தாவிய நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்காரநீக்கப்பட்டதையடுத்து வெற்றிடமான ஐக்கிய மக்கள் சக்தியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு பந்துல லால் பண்டாரிகொடவின் பெயரை தேர்தல்கள் ஆணைக்குழு வர்த்தமானியில் வெளியிட்டுள்ளது.

மனுஷ நாணயக்கார மற்றும் ஹரீன் பெர்னாண்டோ ஆகியோரின் கட்சி உறுப்புரிமையை பறிக்கும் வகையில் ஐக்கிய மக்கள் கட்சி எடுத்த தீர்மானம் சட்டப்பூர்வமானது என ஒகஸ்ட் 9 உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்ததால் அவர்களது பாராளுமன்ற உறுப்பினர் பதவிகள் பறிக்கப்பட்டன.

2020 ஆம் ☞ 8

## ஜனக ரத்நாயக்க கட்சியின் செயலர் உட்பட பலர் கைது

### இலஞ்சக் குற்றச்சாட்டின் கீழ்

பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க ஜனாதிபதி வேட்பாளராக வரவேண்டுமானால் தனக்கு 3 கோடி -ரூபாய் இலஞ்சம் தரவேண்டும் என்று கேட்டார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள எக்சத் லங்கா பொதுஜன ☞ 8

## சிகிரிய சுற்றுலாவிகள் மீது நேற்று குளவிகள் தாக்குதல்

சீகிரியா சிங்கபாதம் அருகில் சுற்றுலாப் பயணிகள் குழு மீது குளவி கொட்டியதைத் தொடர்ந்து சீகிரியாவை தற்காலிகமாக மூடுவதற்கு மத்திய கலாசார நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நேற்றுப் பிற்பகல் குளவி தாக்கியதில் 26 ☞ 9

## இனப்படுகொலை தூபி விவகாரம்

கொழும்பின் அழுத்தத்துக்கு பணிய மாட்டோம்; கனேடிய பிரம்டன் நகர பிதா அழுத்த அறிவிப்பு

இலங்கையில் இடம்பெற்ற தமிழ் இனப் படுகொலையின் நினைவாகக் கனடாவில் எழுப்பப் படவுள்ள நினைவுத் தூபிக்கு கொழும்பு அரசு தெரிவித்த எதிர்ப்பால் தாம் பின்வாங்கப் போவதில்லை என்று கனடாவின் பிரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுன் தெரிவித்துள்ளார். இலங்கையின் நடவடிக்கை தமது உள் விவகாரங்களில் மேற்கொள்ளப்படும் தலையீடு என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"இனப்படுகொலை புரிந்த இலங்கை அரசினால் எமது உள் விவகாரங்களில் மேற்கொள்ளப்படும் தலையீடுகளால் நாம் ஒருபோதும் பின்வாங்க மாட்டோம்" என அவர் தனது எக்ஸ் ☞ 8

## இன்று வேட்புமனுத் தாக்கல் ரணில், நாமல் கையொப்பம்

### கட்டுப்பணம் செலுத்தியோர் எண்ணிக்கை 40

ஜனாதிபதித் தேர்தல் செப்டெம்பர் 21 நடைபெறவுள்ள நிலையில் அதற்கான வேட்புமனுக்கள் இன்று பெறப்படவுள்ளன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாமல் ராஜபக்ச, விஜயதாசராஜபக்ச, திலித் ஜயவீர ஆகியோர் நேற்றே தமது வேட்புமனுக்களில் கையொப்பமிட்டனர்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காகக் கட்டுப்பணம் செலுத்தும் கடைசித் திகதி ஒகஸ்ட் 14 நேற்றுடன் முடிவடைந்தது. தேர்தலில் போட்டியிட 40 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர். இன்று வேட்புமனுக்கள் தேர்தல் ஆணைக்குழுவினால் ஏற்கப்படவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்றுத் தனது வேட்புமனுவில் சம்பிரதாயபூர்வமாக நல்ல நேரத்தில் கையெழுத்திட்டார். இது தொடர்பான நிகழ்வு கொழும்பு பிளவர் வீதியிலுள்ள அவரது அரசியல் அலுவலகத்தில் இடம்பெற்றது.

மற்றொரு வேட்பாளரான நாமல் ராஜபக்சவும் நேற்றுத் தனது வேட்புமனுவில் கையெழுத் ☞ 8

### ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில்

## தமிழ் அரசுக் கட்சியின் அணுகுமுறையே சரி

### இந்தியத் தூதவர் சுமந்திரனிடம் தெரிவிப்பு



ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்களில் யாரை ஆதரிப்பது என்று முடிவு செய்ய அவசரப்பட வேண்டியதில்லை. வேட்பாளர்கள் அனைவருடனும் தொடர்ந்து பேசி அவர்களை உச்சபட்ச அதிகாரப் பகிர்வுக்கு இணங்க வைக்கும் தமிழ் அரசுக் கட்சியின் நிலைப்பாடு, முயற்சி சரியானது. அதே வழியில் பயணிப்பதே சிறந்தது. ☞ 8

## தனிநபர் வருமான வரிச் சலுகை தொடர்பில் ஆளும் தரப்பு கவனம்

### பரிந்துரைகளை ஆராய்வதாக ஜனாதிபதி தெரிவிப்பு

தனிநபர் வருமான வரிக்கு விரைவில் நிவாரணம் வழங்க எதிர்பார்ப்பதாகவும், அதற்காக சர்வதேச நாணயநிதியம் மற்றும் திறைசேரி ஆகியவற்றினால் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ள இரண்டு முன்மொழிவுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அதற்காக திறைசேரி சமர்ப்பித்த பரிந்துரையையும் சர்வதேச நாணய நிதியம் (IMF) முன்வைத்த மாற்றுப் பரிந்துரையையும் பரிசீலித்து வருவதாக தெரிவித்த ஜனாதிபதி, வரி எல்லையை விரிவுபடுத்துவதற்கும் சர்வதேச நாணயநிதியம் முன்வைத்திருக்கும் பரிந்துரைகள் அறிஞர்கள், நடுத்தர வர்க்க சமூகத்திற்கும் நன்மை பயப்பதாக அமையும் என்பதால் அது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு பொருளாதாரத்தை த ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

காரர்களுக்குள் உள்ள குழப்பம் போன்றே ஊடகவியலாளர்கள் சங்கங்களுக்குள்ளும்பிரச்சினைகளும் சங்கடங்களும் இருந்தன. ஒரு ஊடகச் சங்கத்தின் தலைவர் ரணிலின் சந்திப்புக்குச் செல்வதை எதிர்த்துத் தனது பதவியைத் துறந்த சம்பவம்கூட வவுனியாவில் இடம்பெறுமளவிற்கு இதுவும் சர்ச்சைக்குரியதாக இருந்தது.

தேர்தல் வந்தால் அரசியல்வாதிகளுக்கு ஊடகவியலாளர்களின் ஞாபகம் வருவதும் அவர்களுக்கு விருந்து தருவதும் அன்பளிப்பு மட்டுமன்றி தேர்தல் விளம்பரம் என்கிற பெயரில் பெருமளவில் வருமானம்தருவதும்கூட ஒருவகையில் லஞ்சம், ஊழல் வகையறாக்களுக்குள் வருவதுதான். ஆனால் அவையெல்லாம் இலங்கையில் இயல்பு என்றாகிவிட்டதால், அதை எதிர்ப்போர் பைத்தியக்காரர்களாகக் கருதப்படும்நிலைதான் இருக்கிறது.

நாமலின் நேற்றைய விருந்தில் நிறையப் பேர் கலந்துகொண்ட காரணத்தால் அச்சு ஊடகப் பிரபலங்களை அவர் ஹில்டன் ஹோட்டலிலும்மின்னியல்மற்றும் சமூக ஊடகப் பிரபலங்களை ஹிங்ஸ்பெரி ஹோட்டலில் வைத்தும் சந்தித்தார். விரைவில் தமிழ் ஊடகர்களுக்கும் ஒரு 'விருந்து' தயாராக இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்.

அவருக்கு இந்தத் தேர்தலில் தான் வெல்லமாட்டார் என்பது நன்கு தெரியும். 2019தான் அவரது முழு இலக்கு. அதற்கிடையில் தனது 'இமேஜ்' உயர வேண்டும் என்பதுதான்இப்போதைக்குஅவரது தேவை எல்லாம். இந்தத் தேர்தலில் மூன்றாவது அல்லது நான்காவது இடத்தைப்பெற்றாலும்கணிசமான வாக்குகளைக் கவரவேண்டும் என்பது மட்டும்தான் அவருக்கு இந்தத்தேர்தலில்இலக்கு. அதற்காக அவர் கொழும்பில் சில தமிழ்ப் பத்திரிகையாளர்களுடன்ஏற்கனவே 'டீல்' முடித்துள்ளார் என்பதையும் அறிய முடிந்தது.

..................

ரணில்விக்கிரமசிங்கவும், சஜித் பிரேமதாசவும் மீண்டும் இந்த மாத இறுதியில் யாழ்ப்பாணம் வரவுள்ளார்கள். ஒகஸ்ட் 30 ரணிலும்மறுநாள்சஜித்தும்வருகை தரவுள்ளனர். ஜனாதிபதித்தேர்தலை இலக்குவைத்துஅவர்கள்இருவரும் ஏற்கனவே சில தடவைகள் யாழ்ப்பாணம் வந்து சென்றாலும் தேர்தல் நாள் அறிவிக்கப்பட்ட பின்னர் அதன் பரப்புரைக்காக உத்தியோகபூர்வமாக இந்தமுறை யாழ்ப்பாணம் வருகிறார்கள். தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுவிடவேண்டும் என்பதில் இருவருமே அதிக அக்கறையோடு இருக்கிறார்கள்.

தமிழ் மக்களிடம் தனக்கு இன்னும் கணிசமான ஆதரவு இருக்கிறது, தனக்கு அவர்கள் வாக்களிப்பார்கள் என்று ரணில் நம்புகின்றார். ஆனால் சிங்கள மக்கள் தனக்கு வாக்களிப்பார்கள் என்கிற ரணிலின் நம்பிக்கை மெல்லச் சரிந்து வருவதாகத்தான் தெரிகின்றதுஎன்றார்நேற்றுஅவரை நேரில் சந்தித்துப் பேசிய பிரமுகர் ஒருவர். கடந்தமுறை பார்த்தபோது இருந்ததைவிடஇப்போதுஅவருக்கு ''முகஞ்சரியில்லை'' என்றார் அவர். ஏன் என்று கேட்டேன். ''உண்மையான கள நிலவரம் இப்போதுதான் தெரியவருகின்றது போலும்...'' என்று இழுத்தார். ஆனாலும்உங்களுக்குநல்லஆதரவு இருக்கின்றது, இன்னும் கொஞ்சம் முயன்றால் நல்ல பெறுபேறு கிடைக்கும் என்று தான் அவரைக் கொஞ்சம் உசுப்பேற்றிவிட்டு வந்தேன் என்றும் சொன்னார்.

ரணிலின் மூளையைத் தொட்டிருக்கும் இந்த யோசனை கடைசி நேரத்தில் ஜோ பைடனின் பின்வாங்கல் மாதிரி நடந்து முடியாத வரைக்கும் நல்லது என்று நினைத்துக்கொள்வோம். ரணில் போட்டியிட்டால்தான் தன்னைச் சிங்கள மக்க எந்த இடத்தில் வைத்திருக்கிறார்கள் என்பதையும் தமிழ் மக்களுக்குச் செய்த துரோகத்திற்கான பதில் என்ன என்பதையும் தெளிவாகப் புரிந்துகொள்வார். அவருக்கு அது கட்டாயத் தேவை.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அதிகாரங்கள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பின்போதே அவர் இதனை வலியுறுத்தினார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தைநடைமுறைப்படுத்துவது தொடர்பில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. நிர்வாக ரீதியாக மாகாண சபைகளுக்குப் பாரப்படுத்தக்கூடிய அதிகாரங்களைக் கையளிக்கும் நடவடிக்கைகளை உடனடியாக எடுப்பது குறித்து இதன்போது ஆராயப்பட்டது.

13 தொடர்பில் தான் நடைமுறைப்படுத்தஉத்தேசித்துள்ள விடயங்களை உள்ளடக்கி அண்மையில் சுமந்திரனிடம் கையளித்த ஆவணத்தை ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளிடமும்தான்வழங்கியிருக்கிறார் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

தற்போதிருக்கும் அரசியல் சூழலில்நாடாளுமன்றத்தில்சட்டங்கள் இயற்றி மாகாணங்களுக்குக் கையளிக்கப்படக்கூடிய அதிகாரங்களை வழங்க முடியாது என்பதால் நிர்வாக ரீதியில் விவசாயம், கல்வி, சுகாதாரம் ஆகிய துறைகளில் வழங்கப்படக்கூடியஅதிகாரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சந்திப்பில் ஜனாதிபதித தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவால் கையளிக்கப்பட்ட ஆவணத்தில் உள்ளவிடயங்களைநடைமுறைப் படுத்துவதற்கு உருவாக்கப்பட வேண்டிய சட்டங்கள், நீக்கப்பட வேண்டிய சட்டங்கள் குறித்தும் இருவரும் விரிவாகக் கலந்துரையாடினர்.

அதேபோன்று அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தில் பறிக்கப்பட்ட அதிகாரங்களைத்திருப்பித்தருவதாகஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வாக்குறுதியளித்திருக்கும்நிலையில்,அவ்வாறு வழங்கப்படும்அதிகாரங்கள்மீண்டும் பறிக்கப்படாதவாறு அரசமைப்பு மாற்றியமைக்கப்படவேண்டும் எனவும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக அதற்குரிய உத்தரவாதத்தை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வழங்கவேண்டும் எனவும் இதன்போது சுமந்திரன் வலியுறுத்தினார்.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, அதனை செனெட் சபை மூலமாகச் செய்வதாக அல்லவா ஏற்கனவே கலந்துரையாடினோம் என வினவினார். அதனை ஆமோதித்த சுமந்திரன், புதிய அரசமைப்பு தொடர்பில் முன்னர் கலந்துரையாடியவேளையில், மேற்குறிப்பிட்டவாறு வழங்கிய அதிகாரங்கள் மீண்டும் பறிக்கப்படாமல் பாதுகாப்பதற்கு செனெட் சபையை நிறுவுவது குறித்துத் தாம் பேசினார் எனவும், இருப்பினும் அதுகுறித்து பகிரங்கமாகத் தெரியக்கூடியவகையில் ஜனாதிபதி உத்தரவாதத்தைவழங்கவேண்டும் எனவும்சுமந்திரன்வலியுறுத்தினார். ஜனாதிபதி அதனைக் குறிப்பெடுத்துக்கொண்டார்.

ஏற்கனவே நடைமுறையில் உள்ள சட்டங்களை உடனடியாக மாற்ற முடியாவிட்டாலும் அவற்றின் கொள்கை ரீதியான முடிவெடுக்கும் அதிகாரத்தை மட்டும் நாடாளுமன்றத்திடம் வைத்துக்கொண்டு சட்டத்தை நடைமுறைப்படுத்தும்அதிகாரத்தை மாகாண சபைகளிடம் கையளிக்க முடியும் என்கிற யோசனையை ரணில்விக்கிரமசிங்கமுன்வைத்தார். அதனை எப்படி முன்னெடுப்பது என்பது தொடர்பில் இருவரும் ஆராய்ந்தனர்.

விசேட சட்டங்களுக்கான தேவைப்பாடுகள் உள்ளபோதிலும், அவைதவறான நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படாதவண்ணம் அவற்றைமாற்றியமைக்கவேண்டும் எனவும்ஜனாதிபதியிடம்சுமந்திரன் வலியுறுத்தினார். அதனை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, இதுபற்றியும் சுமந்திரனுடன் விரிவாகக் கலந்துரையாடினார்.

## தனிநபர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீட்டெடுக்கும் நோக்கில் இலங்கையின் உயர்கல்வி முறையில் மாற்றம் ஏற்படுத்தும் வகையில் விரிவான சீர்திருத்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பத்தரமுல்லையில் உள்ள தனியார் விருந்தகம் ஒன்றில் நேற்று (13) மாலை நடைபெற்ற 'இலங்கையின் உயர்கல்வியை அபிவிருத்தியடைந்த தேசத்திற்கு மாற்றியமைத்தல்' என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற பல்கலைக்கழக விரிவுரையாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கமேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் உயர்கல்வியின் தரத்தை உயர்த்தும் வகையில் அரச பல்கலைக்கழகங்களுக்கு சுதந்திரமாக செயற்படும் திறனை வழங்குவதன்முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் கூறியதாவது,

இந்த நிகழ்வில் பங்கேற்பதற்கு முன், நாட்டின் பொருளாதார நிலை குறித்த முக்கிய கலந்துரையாடலில் பங்கேற்றேன்.

அங்கு வெளிப்படுத்தப்பட்டபடி, எதிர்காலத்தில் சாதகமான சில செய்திகளை செவிமடுப்பீர்கள்.

வெளிநாடு செல்ல எதிர்பார்க்கும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களை தக்கவைக்கவும் இது உதவும் என்பதை குறிப்பிட வேண்டும்.

நமது அமைச்சர்கள் காட்டிய திறமையால், முதல் ஆண்டிலேயே நெருக்கடியிலிருந்து மீண்டு வர முடிந்தது.

நெருக்கடியில் சிக்கியிருந்த நாட்டின் பொருளாதாரத்தை புதிதாக கட்டியெழுப்பினோம். உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழு, சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய தரப்பினர்களுடன் ஏற்கனவே உடன்படிக்கை எட்டியுள்ளோம்.

அந்த ஒப்பந்தங்களில் பல முன்மொழிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன. அவர்கள் குறிப்பிடும் அளவுகோல்களுக்குள் நாங்கள் செயல்பட வேண்டும்.

உத்தியோகபூர்வகடன்வழங்கும் குழுவிலுள்ள 17 நாடுகள், சீனா எக்ஸிம் வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும்உலகவங்கிஉட்படமொத்தம் 21பங்குதாரர்களுடன் உடன்பாடு காணப்பட்டுள்ள பொருளாதார வரையறைகள் தொடர்பிலான பேச்சுவார்த்தைகளுக்குளங்களுக்கு ஒரு வருடம் ஆனது. இந்த அளவீடுகளை மாற்ற முடியாது.

முதலில், 2025-2032க்குள் முதன்மை வரவுசெலவுத் திட்டத்தில் 2.3% உபரியாக பேண வேண்டும். தற்போது, நாங்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.6% ஆக இருப்பதோடு 2.3% உபரியை இலக்காகக் கொண்டு நமது வரவுசெலவுத் திட்டத்தை தயாரிக்க வேண்டும்.

2032 க்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பொதுக் கடன் 95% ஆகக் குறைக்கப்பட வேண்டும். தற்போது 111% வீதமாக அது உள்ளது.

2032 ஆம் ஆண்டில், மொத்த நிதித் தேவைகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின்13%சதவீதமாகஇருக்க வேண்டும், அதே நேரத்தில் அது தற்போது 27.8% ஆக உள்ளது.

அதன்படி, அதை பாதியாக குறைக்க வேண்டும். தற்போதைய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.2% உடன் ஒப்பிடும்போது வெளிநாட்டு கடன் சேவை 1.3% ஆக குறைக்கப்பட வேண்டும். 2025 ஆம் ஆண்டில், வரி வருவாய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 14% ஐ எட்ட வேண்டும், அதே நேரத்தில் நாம் தற்போது 9.5% ஆக இருக்கிறோம்.

மேலும், 2028ம் ஆண்டுக்குள் நமது வெளிநாட்டு கையிருப்பு 15 பில்லியன் டொலர்களாக அதிகரிக்கப்பட வேண்டும். தற்போது எங்களிடம்5.6பில்லியன்டொலர்கள் மட்டுமே கையிருப்பு உள்ளது.

பணவீக்கம்5%ஐவிடஅதிகமாக இருக்கக்கூடாது மற்றும் திறைசேரி பிணையின் அளவு 75% க்கும் குறைவாக இருக்கவேண்டும். இந்த இரண்டு இலக்குகளையும்நாங்கள் ஏற்கனவே அடைந்துவிட்டோம்.

மேலும் மூன்று மாதங்களுக்கு மேல்அரசாங்கம்செலுத்தவேண்டிய நிலுவைத்தொகையைசெலுத்தாமல் இருக்க முடியாது.

மத்திய வங்கிக்கு பணத்தை அச்சிட அனுமதியில்லை. மின்சாரம் மற்றும் எரிபொருளுக்கான இலாபகரமானவிலைகள்பேணப்பட வேண்டும்.

இலங்கை மின்சார சபை அல்லது பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் ஏற்படும் எந்தவொரு நட்டத்தையும் திறைசேரிக்கு மாற்றுவதன் மூலம் அதனை ஈடுசெய்யப்பட வேண்டும்.

சமூகப் பாதுகாப்பிற்காகப் பயன்படுத்தப்படும் நிதிகளுக்கு குறைந்தபட்ச செலவு வரம்புகள் பராமரிக்கப்பட வேண்டும்.

ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்பாடுகளின்படிசமூகநலன்புரிப் பயனாளிகளின் எண்ணிக்கையை 16 இலட்சத்தில் இருந்து 24 இலட்சமாக உயர்த்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

நாடு வங்குரோத்தடைந்த காலத்திலும், நாம் முன்பு வழங்கியதை விட அதிகமான சமூக நல உதவிகளை வழங்க முடிந்தது, மேலும் அந்த போக்கை நாம் தொடர வேண்டும்.

இந்த விதிமுறைகளை மறுபரிசீலனைசெய்யவோஅல்லது மாற்றவோ முடியாது .

எங்கள் கடன்வழங்குநர்கள் 10 பில்லியன் டொலர்கள் வரை கடன் நிவாரணம் வழங்க உடன்பாடு தெரிவித்துள்ளனர். சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்தின் ஊடாக எமக்கு மூன்று ஆண்டுகளில் 2.9 பில்லியன் டொலர்கள் கிடைக்கிறது.

ஆனால் நாம் செய்துகொண்ட உடன்படிக்கைகளின்படியே நாம் நடக்க வேண்டும். இதற்காகத்தான் பொருளாதார பரிமாற்ற சட்டத்தை கொண்டு வந்தோம்.

இலங்கையை ஏற்றுமதி சார்ந்த மற்றும் போட்டிப் பொருளாதாரமாக மாற்றுவதே எமது இலக்காக இருக்க வேண்டும்.

இப்போது நாம் வரி வரம்புகள்

தொடர்ச்சி 8ம் பக்கம்...



காலைக்கதிர் Kalaikkathir

# நோர்வூட் பாடசாலை அதிபருக்கு எதிராக ஹற்றனில் பெற்றோர் பலர் ஆர்ப்பாட்டம்





(எஸ் சதீஸ்)

ஹற்றன் கல்வி வலையத்திற்குட்பட்ட நோர்வூட் சென்ஜோன் டிலரி தமிழ் வித்தியாலயத்திற்கு ஊழல் கொண்ட அதிபரை வெளியேற்றி முறையான ஊழல் அற்ற ஓர் அதிபரை நியமிக்குமாறு வலியுறுத்தி சென்ஜோன் டிலரி தமிழ் வித்தியாலயத்திற்கு அருகில்ஆர்ப்பாட்டம்ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிமுதல் 9.30 மணிவரை இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது சுமார் 300 இற்கும் மேற்பட்ட பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் ஊடாக பெற்றோர்கள் தெரிவிக்கையில் -

நோர்வூட் சென்ஜோன் டிலரிதமிழ்வித்தியாலயத்தில் கடமையில் ஈடுபட்டு வந்த அதிபர் கடந்த வாரம் ஓய்வு பெற்றுள்ள நிலையில் ஹற்றன் வலயக் கல்விப் பணிமனை வரதராஜன் என்ற ஓர் அதிபரை நியமித்துள்ளது. தற்போது வலயக்கல்விப்பணிப்பாளர் ஆர். விஜேந்திரனினால் நிமிக்கப்பட்ட அதிபர் இதற்கு முன்னர்அவர்கடமைபுரிந்த பாடசாலைகளில் பல்வேறு ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர். ஆகையால்தான் நாங்கள் கூறுகிறோம் இந்த அதிபர் எமது பாடசாலைக்கு வேண்டாம்எனவழியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.

இதேவேளை இந்த ஆர்ப்பாட்டத்தின் போது ஆர்ப்பாட்ட காரர்கள் தீர்வு வேண்டும் தீர்வு வேண்டும் எங்கள் கோரிக்கைக்கு தீர்வு வேண்டும் ஒழுக்கமில்லாத வரதராஜாவே உம்மிடம் எங்கள் பிள்ளைகள் ஒழுக்கத்தை கற்பிக்கபோவது எப்படி? உமது அராஜக நடத்தைகளுக்கு எங்கள் கல்விதான் பழியா? பிரதி அதிபர் ஒருவர் இருக்கும் போது இன்னொரு பிரதி எதற்காக? இது அறிவாளிகளின் செயற்பாடா ? அல்லது அரசியல் அழுத்தங்களா? இதன் சூழ்ச்சி என்ன? போன்ற பதாதைகளை ஏந்தியும் கோஷங்களை எழுப்பியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர் எமது பாடசாலைக்கு முறையான ஒழுக்கமுள்ள அதிபரை எமது பாடசாலைக்கு நியமிக்குமாறு கோரிக்கை விடுத்ததோடு முறையான அதிபர் ஒருவர் எமது பாடசாலைக்கு நியமிக்கப்படாவிட்டால் எமது போராட்டம் பாரிய ஒரு போராட்டமாக உருவெடுக்குமென ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர்கள் வலயக்கல்விப் பணிப்பாளருக்கு எச்சரித்தனர்.



இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பாக ஹற்றன் வலயக்கல்வி பணிமனையின் பணிப்பாளர் ஆர். விஜேந்திரனை தொடர்பு கொள்ள முயற்சித்த போதும் அது பயனிக்கவில்லை. இந்த சம்பவம் தொடர்பாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமாரிடம் தொடர்பு கொண்டு வினவியபோது -

நோர்வூட் சென்ஜோன் டிலரி தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் விவகாரம் தொடர்பாக தொலைபேசி மூலம் தமக்கு பெற்றோர்கள் முறைப்பாடு ஒன்றை முன்வைத்தனர் எனவும் பாடசாலையின் மாணவர்களின் எதிர்காலம் குறித்து உடனடியாக விசாரனை ஒன்றை ஆரம்பித்து கல்வி அமைச்சுக்கு அறிக்கை ஒன்றை சமர்பிக்குமாறு மத்திய மாகாண கல்வி திணைக்களத்தின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். (05)

## 40 லட்சம் ரூபா பெறுமதியிலான வாழ்வாதார உதவிகள் வழங்கல்





மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 58 பயனாளிகளுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மகளிர் அணிச் செயலாளர் திருமதி சுசிகலா அருள் தாஸ் தலைமையில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைமை காரியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவ.சந்திரகாந்தன் கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்ட குறித்த பயனாளிகள் பொருள்களை பெற்றுக் கொள்வதற்கான அனுமதிகடிதங்களை கையளித்திருந்தார்.

இராஜாங்க அமைச்சர் சிவ. சந்திரகாந்தனின் பன்முகப்படுத்தப்பட்ட 103 மில்லியன் ரூபா செலவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், மண்முனைவடக்குபிரதேச செயலக பிரிவிற்கென ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ள10 மில்லியன் ரூபா செலவில் விளையாட்டு கழகங்கள் விளையாட்டுத்துறை சார் பயிற்சிநிலையங்களுக்கான உபகரணங்கள் அண்மையில் வழங்கி வைக்கப் பட்டிருந்த நிலையில், பொருளாதார நலிவு நிலை காரணமாக தமது சுய தொழில்களை முன்னெடுப்பதில் வள பற்றாக்குறைகளை எதிர்கொண்டு வந்த தொழில் முயற்சியாளர்களுக்கான உபகரணங்கள் பெற்றுக் கொடுக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில்மாவட்டஅபிவிருத்திக் குழு தலைவரின் பிரத்தியேக செயலாளரும், கட்சியின் தேசிய அமைப்பாளருமான தம்பிராசா தஜீவரன், கட்சியின் இளைஞரணி செயலாளர் சண்முகலிங்கம் சுரேஷ்குமார் மண்முனை வடக்கு பிரதேச குழு தலைவர் காந்தராசா உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்.(05)



## வீரமுனைப் படுகொலையின் 34ஆவது நினைவேந்தல்

### உணர்வெழுச்சியுடன் நிகழ்வுகள்












(வி.ரி.சகாதேவராஜா)

1990 இல் இடம்பெற்ற வீரமுனைப் படுகொலையின் 34 ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வுவீரமுனைசிந்தாயாத்திரை பிள்ளையார் ஆலயமுன்றிலில் மிகவும்உணர்வுபூர்வமாகதிங்கட் கிழமை மாலை இடம்பெற்றது.

வீரமுனை கண்ணகை அம்மன் ஆலய தர்மகர்த்தா பூ.பரமதயாளன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சோ. புஸ்பராஜா, காரைதீவு முன்னாள்பிரதேசசபைதவிசாளர் கி.ஜெயசிறில் உள்ளிட்ட ஆலய உறுப்பினர்கள் பிரதேச மக்கள் எனப்பலரும்கலந்துகொண்டனர்.

இம் மிலேச்சத்தனமான படுகொலை 1990 ஓகஸ்ட் மாதம் 12 ஆம்திகதி வீரமுனை ஆலயத்தினுள் வைத்து இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உறுதியான குரல்

இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை குறித்து கனடாவில் இருந்து மீண்டும் ஒருமுறை உறுதியான வெளிப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. அந்த நாட்டின் பிரம்டன் நகர பிதா பற்றிக் பிரவுணிடம் இருந்த அந்தக் குரல் வந்துள்ளது. இலங்கையில் தமிழ் அரசியல் தலைவர்கள்கூடச் சொல்லத் தயங்கும் விடத்தைய அவர் ஆணித்தரமாக எடுத்து வைத்துள்ளார். அதனைப் புரிந்துகொண்ட நடக்க முடிந்தால் இலங்கையின் எதிர்காலம் சிறப்பானதாக அமையும்.

இலங்கையில் இடம்பெற்ற தமிழ் இனப்படுகொலையின் நினைவாகக் கனடாவில் எழுப்பப்படவுள்ள நினைவுத் தூபிக்கு கொழும்பு அரசு தெரிவித்த எதிர்ப்பால் தாம் பின்வாங்கப்போவதில்லை என்ற நகர பிதா பற்றிக் பிரவுணின் உறுதியான அறிவிப்போது அவர் தெரிவித்திருக்கும் விடயங்கள் மிக முக்கியமானவை.

”தமிழ் இனப்படுகொலை தொடர்பில் பொறுப்புக்கூறவேண்டிய குற்றவாளிகளை இலங்கை ஆளும்தரப்பு ஹேக் நகரிலுள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் கையளிக்கும் வரை உண்மையான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பமுடியாது. இருப்பினும் இப்போர்க்குற்றவாளிகளை அவர்கள் இழைத்த மனிதகுலத்துக்கு எதிரான மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறச்செய்வதற்குப் பதிலாக, இலங்கை அரசு அவர்களைப் பாதுகாத்துவருகின்றது” என நகர பிதா பற்றிக் பிரவுன் விசனம் வெளியிட்டுள்ளார்.

தமிழ் இனப்படுகொலை நினைவுத் தூபியை பிரம்டன் நகரில் நிறுவுவதற்கு புலம்பெயர் தமிழர்களால் மேற்கொள்ளப்படும் முயற்சி இலங்கையிலும், கனேடியவாழ் இலங்கையர்கள் மத்தியிலும் முன்னெடுக்கப்பட்டுவரும் நல்லிணக்க நடவடிக்கைகளில் பெரும் பின்டைவை ஏற்படுத்தும் என இலங்கை ஆளும் தரப்பு வடித்த நீலிக் கண்ணீருக்குப் பதிலளிக்கும்போதே நகர பிதா இதனைத் தெரிவித்துள்ளார்,

பிரம்டன் நகரில் தமிழ் இனப்படுகொலை நினைவுத் தூபி ஒன்றை எழுப்புவதற்கு புலம்பெயர் தமிழர்கள் எடுத்து வரும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அதற்கு நகர பிதா ஆதரவளிக்கக்கூடாது என்று வலியுறுத்தியும் இலங்கை அரசு சார்பில் எழுதப்பட்ட அந்தக் கடிதத்தில் பச்சைப் பொய்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

”இன, மதபேதங்களுமின்றி அனைத்து இலங்கையர்களும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், அவ்வாறிருக்கையில் இத்தகைய நினைவுத்தூபியை நிர்மாணிப்பது பாதிக்கப்பட்ட இலங்கையர்கள் மத்தியில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு முன்னெடுக்கப்படும் முயற்சிகளில் பின்னடைவை ஏற்படுத்தும் எனவும் அவ்வமைப்புக்கள் கரிசனை வெளியிட்டிருக்கின்றன. அதுமாத்திரமன்றி இந்நடவடிக்கையானது கனேடிய இலங்கையர் சமூகத்தினிடையேயான இனநல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாட்டிலும், இலங்கையின் பல்லின சமூகங்களுக்கு இடையிலான ஒற்றுமையிலும் எதிர்மறைத்தாக்கத்தை ஏற்படுத்தும்.

அதேவேளை இலங்கையில் மூன்று தசாப்தகாலமாக இடம்பெற்ற போரின்போது இனப்படுகொலை இடம்பெற்றமைக்கான ஆதாரங்கள் எவையும் ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட எந்தவொரு அமைப்புக்களினாலும் வெளியிடப்படவில்லை. யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழ்ந்த மக்களுக்கு அவசியமான அத்தியாவசியப்பொருட்களும், அரச கட்டமைப்புக்கள் இடையூறின்றி இயங்குவதற்கு அவசியமான நிதியும் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்டமை தெளிவாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று இலங்கையில் இலவசக்கல்வி, இலவச சுகாதாரம், ஏனைய அரச மற்றும் தனியார் சேவைகள் உள்ளிட்ட அனைத்தும் தமிழர்கள் உள்ளடங்கலாக சகலராலும் சமத்துவமான முறையில் அனுபவிக்கப்படுகின்றன.

சர்வதேச ரீதியில் தடைசெய்யப்பட்ட அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடனான போர் 2009ஆம் ஆண்டு முடிவுக்குக்கொண்டுவரப்பட்டது. அதன்பின்னர் கொவிட் – 19 வைரஸ் பெருந்தொற்று, இயற்கை பேரிடர் உள்ளிட்ட பல்வேறு நெருக்கடிகளுக்கு இலங்கை முகங்கொடுத்த போதிலும், போருக்கு அடிப்படையாக அமைந்த காரணிகளைக் களைந்து, அதன் பின்னரான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கே ஆளும் தரப்பு தொடர்ந்து முன்னுரிமை அளித்து வந்திருக்கின்றது” என்று அந்தக் கடிதத்தில் கூறப்பட்டிருந்தது.

போர் முடிந்த கடந்த 15 ஆண்டு காலத்தில் இலங்கை அரசு ஒருபோதும் இதயசுத்தியோடு நல்லிணக்க முயற்சிகளை எடுத்ததில்லை. உலக அரங்கில் தனக்கு ஏற்படும் அழுத்தங்களைச் சமாளிக்க சில சமாளிப்பு அறிவிப்புக்களை விடுத்து ஏமாற்றுவதையே தனது வாடிக்கையாக வழமையாகக் கொண்டிருந்தது. அது மட்டுமன்றி நினைவுகூரலைத் தடுப்பது பாதிக்கப்பட்டவர்களை அச்சுறுத்துவது, இனப் பிரச்சினைக்கான காணிகளைத் தொடர்ந்து நீடிக்க அனுமதிப்பதுடன் அரச அனுசரணை வழங்குவது என்று இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை மோசமாக்கும் செயற்பாடுகளைத்தான் அரசு மேற்கொண்டு வந்திருக்கிறது.

முக்கியமாக கொழும்பு உலகத்திற்கு வாக்குறுதி வழங்கியபடி நிலைமாறு கால நீதியை நிலைநாட்ட எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவேயில்லை. போர்க் குற்றங்களை உள்ளக ரீதியில் விசாரிக்க முடியும் என்று தெரிவித்தபோதும் அதற்கும்கூட இன்றுவரையில் சிறு துரும்பைக்கூட ஆளும் தரப்புக்கள் அசைத்ததில்லை. அப்படியிருக்கும் நிலையில் கனேடிய நகரபிதாவின் உறுதியான குரல் தமிழர்களுக்கு நம்பிக்கைக் கீற்றாகவே ஒலிக்கின்றது.

# இளைஞர்கள் ஒன்றுதிரண்டால் வரலாறு மாற்றி எழுதப்படும்



**மூர்க்குமா செ**

இடஒதுக்கீடு கேட்டோம். துப்பாக்கிகள் குருதி குடித்தன. 400க்கும் மேற்பட்ட இளைஞர்களும் காவலர்களும் உயிரிழந்தனர். வங்கதேசபிரதமர் ஷேக்ஹசீனா இந்தியாவில் தஞ்சம் புகுந்தார். ”சர்வாதிகாரியிடம் இருந்து வங்கதேசம் இரண்டாம் விடுதலை பெற்றுள்ளது. நாடு முழுதும் கொண்டாட்டத்தில் உள்ளது. புதிய காற்றை சுவாசிக்கிறது. புதிய தலைமை உருவாகும். இல்லையெனில் நாடு சிதறியிருக்கும்” வங்கதேசத்தின் தற்காலிக அரசின் தலைவர் மற்றும் அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸின் கூற்று இது.

### ஷேக் ஹசீனாவின் அரசியல்

அழுகிய அரசியல் முறை. பேராசை பிடித்த அரசியல் குடும்பங்கள். அதற்கு முன் நிற்க இயலாத அரசு இயந்திரம். சீர்கெட்ட நிர்வாகம். ஜனவரி 2024இல் நடந்த தேர்தல் முறைகேடுகள் மக்களைக் கொதிப்படைய வைத்தன. உள்நாட்டு நிர்வாகம் சர்வாதிகாரமாக உருவெடுத்திருந்தது. தேர்தலுக்கு முன்பு எதிர்க்கட்சித் தலைவர்களும் பத்திரிகையாளர்களும் சிறையில் தள்ளப்பட்டனர். 1000க்கும் மேற்பட்ட எதிர்க்கட்சித் தலைவர்கள் சிறைச்சாலைகளில். நாட்டின் முதன்மையான எதிர்க்கட்சி, வங்கதேச தேசிய கட்சி தேர்தலில் பங்கேற்கவில்லை. இதனால் மூன்றாவது முறையாக சர்வாதிகார ஆட்சி அமைந்தது.

இன்றைய வங்கதேசத்தின் நிலவரத்துக்கு ஷேக் ஹசீனாவின் கடந்த 15 ஆண்டுகளின் ஆட்சியே காரணமாகும். சமூக - பொருளாதார ஊழல், நிர்வாக, சுற்றுச்சூழல் பிரச்சினைகள், பொய்யான தேர்தல்கள் முக்கிய காரணங்களாகும்.

ஜனநாயகத்தின் குரல்வளையை நெரித்துவிட்டால் நாடு சிறப்பாக வளர்ச்சி அடையும் என்பது ஒவ்வொரு சர்வாதிகாரியினதும் எண்ணமாகும். அங்கு எதிர்க் கருத்துக்கும் உரையாடலுக்கும் இடமில்லை. எதிர்க்கட்சிகளின் குரல்கள் எந்த தேசிய ஊடகங்களிலும் எதிரொலிக்கவில்லை. எதிர்க் கருத்துக்களை ஆளுங்கட்சி கேட்கும் நிலையிலும் இல்லை. வங்கதேசம், ஒரு தசாப்தமாக அவ்வாறே இருந்துள்ளது.

தற்போதைய பிரச்சினைகளைப் பேசாமல், சிறந்த எதிர்காலத்தைக் கட்டமைப்பதாக காற்றில் கோட்டை கட்டினார் பிரதமர். தன்னையே முன்னிலைப் படுத்தினார். நான் இல்லாவிட்டால் நாட்டின் எதிர்காலம் இல்லை என்றார் ஷேக் ஹசீனா. தனக்கு ஈடான தலைவர்கள் இல்லை என்றும் கூறினார்.

தனிமனித துதிபாடலும் போற்றுதலும் அதிகரித்தது. பொதுமக்களின் பிரச்சினைகள் பிரதமரின் காதுகளைச் சென்றடையவில்லை. அவர் கேள்விகளுக்கு அப்பாற்பட்டவராக மாறினார். ஊடகங்களைச் சந்திப்பதும் பொதுமக்களின் கேள்விகளுக்கு பதில் அளிப்பதும் தனது தகுதிக்குக் குறைவாக கருதினார்.

### இன்றைய பிரச்சினை என்ன?

அரசு பொய் சொல்லும் இயந்திரமாக மாறியது. தாம் சொல்லும் பொய்யை அவர்களே மெய் என்று நம்பவும் ஆரம்பித்தார்கள். இவ்வாறு தேர்தல் யதேச்சதிகாரம் உருவெடுத்தது. அரசுத் துறைகள் தவறான தகவல்களைப் பரப்பின. உலக பத்திரிகைகள், ஊடகங்களின் அறிக்கைகளையும் கருத்துகளையும் ஆளுங்கட்சி நிராகரித்தது. கேள்விக் கேட்டவர்கள் தேச விரோதிகள் என்றும் நாட்டுக்கு எதிரானவர்கள் என்றும் முத்திரை குத்தப்பட்டனர்.

1971 வங்கதேச விடுதலைப் போரில் ஈடுபட்டவர்களின் வாரிசுகளுக்கு மீண்டும் அரசு வேலைகளில் இடஒதுக்கீடு வழங்கியது. அதை மாணவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவர்களின் போராட்டத்தை ஒடுக்குவதற்கு சமூக வலைதளங்கள், இணையதள வசதிகள் மூடப்பட்டன. அது மாணவர்களைக் கொந்தளிப்புக்கு உள்ளாகியது. அவர்கள் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பணத்தைப் பெறுவதிலும் சிக்கல் ஏற்பட்டது. 10,000க்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டனர். ஆளும் அவாமிலீக் அரசு வேலைகளைக் கட்டுப்படுத்தியது. இறுதியில் இராணுவமும் அரசினைக் கைவிட்டது.

வங்கதேசத்தின் பொருளாதார வளர்ச்சி அனைவருக்குமானது இல்லை. 2/5 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை. கட்சி சார்ந்தவர்களுக்கு, அரசு வேலைவாய்ப்பும் தொழில் வாய்ப்புகளும் கிடைத்தன. நெருங்கிய நண்பர்களின் பொருளாதாரம் வரலாறு காணாத வெற்றியடைந்தன. ஒட்டுண்ணி முதலாளித்துவம் பொருளாதாரத்தைச் சீரழித்தது. வெளிநாட்டு முதலீடுகள் வெளியேறின. பணவீக்கம் 10% உள்ளது. வேலையில்லாத் திண்டாட்டம் 40% உயர்ந்துள்ளது.

இன்று ஆடைகளின் ஏற்றுமதி பெரும் பின்னடைவை அடைந்துள்ளது. இதன் ஏற்றுமதி 38.4 பில்லியன் டாலர்களாக இருந்தது. ஷேக் ஹசீனாவினால் ஏழ்மை பாதியாக குறைக்கப்பட்டாலும் அடக்குமுறை அதிகமாக இருந்தது. லஞ்சம் அதிகரித்தது. பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்தன. பொதுமக்கள் அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்கு அல்லல்பட்டனர். வெளியுறவுக்கொள்கையில் இந்தியாவுடன் நெருங்கியும் வர்த்தகத்தில் சீனாவுடன் நெருங்கியும் நிர்வாகம் இருந்தது.

இளைஞர்களின் சக்தி உலகின் மாபெரும் சர்வாதிகாரியை மண்டியிடச் செய்துள்ளது. 17 கோடி மக்கள் தொகையில் ஏறத்தாழ 30% இளைஞர்கள். சமூக விழிப்புணர்வும் அதிகம். பிரதமரின் வீடு, கட்சி அலுவலகம் என்பன சூறையாடப்பட்டன. வங்கதேசத்தின் தேசத் தந்தை பங்கபந்து ஷேக் முஜிபுர் ரஹ்மான் சிலையும் உடைக்கப்பட்டது.

### புதிய அரசு செய்ய வேண்டியது என்ன?

தற்போது தற்காலிக அரசு யூனுஸ் தலைமையில் அமைந்துள்ளது. சமூக - பொருளாதார, ஜனநாயக மாற்றங்கள் சிறப்பாக நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதைய நிலையில் அரசு இஸ்லாமிய தீவிரவாதத்தில் விழுவதற்கும் வாய்ப்புள்ளது. நிதிநிலை சீரழிந்தால் வங்கதேச பொருளாதார வளர்ச்சிக்கு சீனாவை நாட வேண்டியிருக்கும். அது அங்கு ஜனநாயகத்தையும் இந்தியாவுடனான உறவையும் பாதிக்கும்.

தேர்தல் நடைபெற்றால், வங்கதேச தேசியக் கட்சி வெற்றிபெற வாய்ப்புள்ளது. அதுவும் பரம்பரை ஆட்சியே. தற்காலிக ஆட்சியும் நீண்ட நாள்கள் தொடர்ந்தால், இராணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றக்கூடும். எனவே, தற்காலிக ஆட்சி உடனடியாக தேர்தலை வெளிப்படையாகவும் நேர்மையாகவும் நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளவேண்டும்.

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# இளைஞர்கள் ஒன்றுதிரண்டால் வரலாறு மாற்றி எழுதப்படும்

4ம் பக்க தொடர்ச்சி...........

அத்துடன் ஷேக் ஹசீனாவின் ஆட்சியில் சீரழிந்த நிர்வாக அமைப்புகளையும் நிறுவனங்களையும் சரிசெய்ய வேண்டும். தேர்தல் ஆணையமும் நீதிமன்றமும் நேர்மை அடையவேண்டும்.

இரண்டு பரம்பரைக் கட்சிகளும் புதிய தலைவர்களுக்கும் வழிவிடவேண்டும். வங்கதேசத்தின் பரம்பரை ஆட்சியும் சர்வதிகாரமும்வீழ்ச்சிஅடைந்ததுபோல்எங்கும்நடைபெறலாம். இளைஞர்கள் ஒன்றுதிரண்டால் வரலாறு மாற்றி எழுதப்படும். ஆட்சியில் இருப்பவர்கள் அறிந்து செயல்படவேண்டும். மாணவர்கள் போராட்டமே, தொடர்ச்சியாக தேர்தலில் வெற்றிபெற்று, இரும்புப் பெண்மணி என அறியப்பட்ட ஷேக் ஹசீனாவை நாட்டைவிட்டு வெளியே ஓடுவதற்குக் காரணமாக அமைந்தது.

### சிறந்த ஜனநாயகம்

ஜனநாயக அரசு என்பது பொதுமக்களுக்கு பதில் அளிக்க கடமைப்பட்டது. சிறந்த ஜனநாயகம் என்பது தனித்து இயங்கும் அரசு நிறுவனங்களின் செயல்பாடுகளில் உள்ளது. நீதித்துறை, தேர்தல் ஆணையம், அரசின் புலனாய்வு அமைப்புகள், ஊடகங்கள், பொறுப்பான எதிர்க்கட்சிகள் போன்றவற்றின் ஒளிவுமறைவற்ற, பாரபட்சமற்ற செயல்பாடுகளினால் ஜனநாயகத்தின் ஆன்மா காப்பாற்றப்படும்.

நாடாளுமன்றம் தலையாட்டி பொம்மைகளின் கூடாரம் அல்ல. இன்றைய ஜனநாயகம் 10ஆம் நூற்றாண்டின் சக்கரவர்த்திகளைத் தேர்ந்தெடுக்கவில்லை.

ஜனநாயகத்தின்மூலம்தேர்ந்தெடுக்கப்படும்சர்வாதிகாரிகள் அரசு அமைப்புகளின் குரல்வளையை நெரிக்கும்போது ஜனநாயகம் செயலிழந்துவிடுகிறது. செயலிழந்த ஜனநாயகத்தைப்புதியதலைமுறைகள்ஏற்றுக்கொள்வதில்லை. நீதிமன்றங்களும் அரசு நிறுவனங்களும் ஊடகங்களும் தனிமனிதனுக்குச் சாதகமாக நிற்கவேண்டும்.

உண்மையில் எந்த ஜனநாயகமும் அரசர்களையும் இளவரசர்களையும் தேர்ந்தெடுப்பதில்லை. ஜனநாயகத்தில் மந்திரிகளும் பிரதமர்களும் அரசமைப்புச் சட்டத்திற்கு ஏற்ப மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தனிமனிதனின் புகழினால் அவரது ஆட்சி நிர்வாகத்தின் இழிவுகளை மறைத்துவிட முடியாது.

# காணாமல்போனோர் அலுவலகத்தால் கிளிநொச்சி மாவட்டத்தில் விசாரணை





காணாமல்போனபற்றியஅலுவலகம் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மேலும் 243பேரிடம் பூர்வாங்க விசாரணை மேற்கொண்டது.

காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேசசெயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த 243பேரிடம் பூர்வாங்க விசாரணைகளை மேற்கொண்டது.

செவ்வாய்க்கிழமை கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் -128பேர், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் 17பேரிடமும் விசாரணை மேற்கொண்டிருந்தது.

நேற்று பூநகரி பிரதேச செயலாளர் பிரிவைச்சேர்ந்த 50 பேருக்கு பூநகரி பிரதேச செயலகத்திலும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவைச்சேர்ந்த 48பேருக்கு கண்டாவளை பிரதேச செயலகத்திலும்விசாரணைமுன்னெடுக்கப்பட்டது.

கண்டாவளைபிரதேசசெயலகத்தில் காணாமல் போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் மகேஸ் கட்டுலந்த தலைமையில் விசாரணை முன்னெடுக்கப்பட்டது. (05 - 113)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 80/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# திருகோணமலையிலும் மக்கள் கருத்தறிவு






(எச் எம் ஹலால்தீன்)

திருகோணமலை மாவட்ட மக்களின் கருத்துக்களை அறியும் நிகழ்வு கிண்ணியா பொதுநூலக மண்டபத்தில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் பிரதி அமைச்சருமான அப்துல்லாஹ் மஹ்ரூப் தலைமையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கலந்து கொண்டு மக்களின் கருத்துக்களைக் கேட்டறிந்தார்.



இதன்போது, கட்சியின் அரசியல் அதிகாரபீட உறுப்பினர் ஹில்மி முகைடீன், உயர்பீட உறுப்பினர்கள், கட்சியின் முன்னாள் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், பிராந்திய அமைப்பாளர்கள், புத்திஜீவிகள், பொதுமக்கள், கட்சி முக்கியஸ்தர்கள் என பலர் கலந்து கொண்டனர். (05)

# மக்கள் காங்கிரஸின் அ.சேனை மக்கள் கருத்து அறியும் நிகழ்வு










(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்ட மக்களின் கருத்துக்களை அறியும் நிகழ்வு திங்கட்கிழமை இரவு அட்டாளைச்சேனை சக்கி வரவேற்பு மண்டபத்தில், கட்சியின் அட்டாளைச்சேனை பிரதேச அமைப்பாளர் அமீர் மற்றும் அட்டாளைச் சேனை மத்திய குழுத் தலைவர் ஹம்ஷா ஆகியோரின் ஒருங்கிணைப்பில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட செயற்குழுத் தலைவரும், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான அப்துல் றஷாக் ஜவாத் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனும், கட்சியின் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான அமீர் அலியும் கலந்துகொண்டு மக்களின் கருத்துக்களைக் கேட்டறிந்தனர்.

இதன்போது, கட்சியின் பிரதி செயலாளரும் முன்னாள் அட்டாளைச்சேனை பிரதேசசபையின் தவிசாளருமான எம்.ஏ. அன்சில், கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளரும், முன்னாள் நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளருமான எம்.ஏ.எம். அஸ்ரப் தாஹிர், கட்சியின் வெளிநாட்டு விவகார பணிப்பாளரும் முன்னாள் சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளருமான மாஹிர், கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், கட்சியின் முன்னாள் பிரதேசசபை உறுப்பினர்கள், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள், கட்சியின் போராளிகள், பொதுமக்களென பலரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த பொத்துவில், அக்கறைபற்று, அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், நிந்தவூர், மாவடிப்பள்ளி, சம்மாந்துறை, இறக்காமம், வாங்காமம், வரிப்பத்தான்சேனை, மாளிகைக்காடு, சாய்ந்தமருது, கல்முனை, மருதமுனை, நட்பிட்டிமுனை, நாவிதன்வெளி, மத்தியமுகாம் ஆகிய பிரதேசங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்






4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

## தனிநபர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்துஆராய்ந்துவருகிறோம்.இந்த ஆண்டு வலுவான பொருளாதாரச் செயல்பாடுகளை நாங்கள் பெற்றுள்ளோம்,அடுத்தஆண்டிலும் அதைத் தொடர எதிர்பார்க்கிறோம்.

மேலும், வரிசெலுத்துவோருக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் தனிநபர்வருமானவரிகட்டமைப்பை மாற்றியமைப்பது குறித்து தற்போது பரிசீலித்து வருகிறோம்.

இது தொடர்பில், சர்வதேச நாணய நிதியம் மற்றும் திறைசேரி ஆகியவற்றினால் இரண்டு முன் மொழிவுகள்சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

1.2 மில்லியன் வரி இல்லாத எல்லையைப் பராமரிக்கும் அதே வேளையில் வரி எல்லையை 5 இலட்சம் ரூபா முதல் 7 இலட்சத்து 20ஆயிரம்ரூபாவரைபேணி, 36% உயர் வரி விகிதத்தை வைத்திருக்க வேண்டும்என்பதே திறைசேரியின் பரிந்துரையாகும்.

ஆனால்சர்வதேசநாணயநிதியம் வழங்கிய எதிர் முன்மொழிவில் வரியில்லா வரம்பை ரூ. 1.2 மில்லியனாக வைத்திருக்கவும் முதலாவது வரிவரம்பை 500,000 ரூபாவிலிருந்த ஒரு இலட்சமாக மாற்றவும் அனைத்து வரி வரம்புகளையும் ரூ. 720,000 வினால் உயர்த்தி ஆரம்ப வரம்பை 500,000 ரூபாவாக பேணி வரி விகிதம் 36% ஆக குறைக்க வேண்டும்.

அந்த பரிந்துரைகளை மதிப்பாய்வு செய்து நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். இங்கு நாட்டிற்கும் மக்களுக்கும் மிகவும் சிறந்தது என்பதை கருத்தில் கொண்டு முடிவெடுக்க எதிர்பார்க்கிறோம்.

தற்போது, பொருளாதாரம் வளர்ந்து வருகிறது. அந்த வளர்ச்சியை மேலும் துரிதப்படுத்த வேண்டும். மனித வளங்களை கொண்டு உச்ச பயனை அடைய வேண்டும்.

இதற்கு உயர்தரத்திலான கல்வி முறையொன்று தேவை. அதற்கான பாடசாலை கல்வி மற்றும் பாடசாலைக்கு பின்னராக கல்வி முறைமைகள் தொடர்பில் ஆராய்கிறோம்.

அதற்காக 500 தொழிற்பயிற்சி நிலையங்களையும் 09 மாகாண முகவர் நிலையங்களையும் ஒருங்கமைத்து தொழிற்கல்வி கல்லூரியாக மாற்றியமைக்க திட்டமிட்டுள்ளோம்.

'இணை பட்டங்கள்' வழங்கும் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பிலான பல்கலைக்கழகங்களை நிறுவுவது குறித்தும் சிந்திக்கிறோம்.

தொழில் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்றால் ஏன் கற்பித்தீர்கள்என்றுபலமாணவர்கள் கேட்கிறார்கள். இந்தச் சிக்கலைத் தீர்க்க, இளங்கலை அல்லது முகாமைத்துவ டிப்ளோமாவுடன் வேலைவாய்ப்பு சார்ந்த 'இணை பட்டம்'பெறுவதற்காகவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பிலும் நாம் ஆராய்கிறோம்.

இந்நாட்டின் பல்கலைக்கழகங்களை உயர்தரம் மிக்கதாக மாற்றுவதே எமது நோக்கமாகும். இதன்கீழ் அரச பல்கலைக் கழகங்களை தரமுயர்த்தி அவை சுயாதீனமாக இயங்குவதற்கான வழிமுறைகளைஉருவாக்குவோம்.

மேலும், பல்கலைக்கழகங்கள் தங்களுக்கான நிதிகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் வெளிநாட்டுமாணவர்களைஈர்க்கும் முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

வெளிநாட்டு மாணவர்களிடம் கட்டணம் அறவிடும் அதேநேரம் உள்நாட்டு மாணவர்களுக்கு அரசாங்கத்தால் நிதி வழங்கப்படும் முறைமை தொடர்பிலும் பல்கலைக்கழகங்கள் ஆராயலாம்.

புதிய பல்கலைகழகங்களை நிறுவுகின்ற அதேநேரம், தற்போது இருக்கின்ற பல்கலைகழகங்களை விரிவுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கிறோம்.

தொழில்நுட்பத்தை மையமாகக் கொண்ட நான்கு புதிய பல்கலைக்கழகங்களைநிறுவவும், உயர்கல்விக்கான சர்வதேச நிறுவனங்களுடன் ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்குமான திட்டங்கள் எம்மிடம் உள்ளன.

இதனால் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பற்றாக்குறையும் ஏற்படலாம்.

பல்கலைக்கழக அந்தஸ்தை வழங்கக்கூடிய அரச சார்பற்ற பட்டம் வழங்கும் நிறுவனங்களும் நாட்டில் உள்ளன.

நிதி மற்றும் முகாமைத்துவத் திற்கான பல்கலைக்கழகங்களுக்கு புதிய கட்டமைப்பு முறைமையை அறிமுகப்படுத்த வேண்டும்.

எதிர்காலத்தில் பிராந்தியற்குள் அதிகரிக்கலாமெனஎதிர்பார்க்கப்படும் உயர்கல்விக்கான தேவையை பூர்த்தி செய்வதற்கான மையமாக இலங்கையை மாற்றுவதே எமது இலக்காகும்.

கல்வி மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு பல திட்டங்கள் மற்றும் யோசனைகள்உள்ளன.நாம்தொடங்கிய செயல்முறையை தொடர்ந்தும் முன்னெடுத்து வெற்றியை நோக்கி செல்ல வேண்டும்.என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

## இன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டார். பொது ஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரான நாமல் ராஜபக்ச கட்சி அலுவலகத்தில் நடந்த சமய வழிபாடுகளைத் தொடர்ந்து தனது தந்தை மற்றும் சிறிய தந்தையர்கள் முன்பாக வேட்புமனுவில்கையொப்பமிட்டார். முன்னாள்ஜனாதிபதிகளானமகிந்த, கோட்டா மற்றும் பஸில் ராஜபக்ச ஆகியோர் நிகழ்வில் நாமலுக்கு ஆசீர்வாதம் வழங்கினர்.

முன்னாள் நீதியமைச்சரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளவருமான விஜயதாச ராஜபக்சவும்நேற்று வேட்புமனுவில் கையெழுத்திட்டார். தேசிய ஜனநாயக முன்னணி சார்பில் அவர் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுகின்றார். இலங்கையின் பிரபல வர்த்தகரும் ஊடக நிறுவன உரிமையாளருமான திலித் ஜயவீரவும் நேற்று வேட்புமனுவில் கையொப்பமிட்டார். சர்வஜன சக்தியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகப்போட்டியிடுவதற்கான வேட்புமனுவில் அவர் கைச்சாத்திட்டார்.வாசுதேவ நாணயக்கார, விமல்வீரவன்ஸ, உதயகம்பன்பில ஆகியோர் அவருக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

## ஜனக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின்செயலாளர்உள்ளிட்டகுழு லஞ்சஊழல்ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளது.

அந்தக் கட்சியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான ஜனக ரத்நாயக்க நேற்றுக் காலை வேட்பாளருக்கான கட்டுப் பணத்தை செலுத்தினார். அவர் செய்தமுறைப்பாட்டுக்குஅமையயே இந்தக்கைதுகள்இடம்பெற்றுள்ளன.

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு ஆலோசனை கூறியிருக்கிறார்இந்திய உயர்ஆணையர் சந்தோஷ் ஜா. தமிழ் அரசுக் கட்சியின்நாடாளுமன்றஉறுப்பினர் சுமந்திரனை நேற்று அழைத்துச் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். காலை 10.00 மணிக்கு கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது, ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்களுடன் அரசியல் தீர்வு தொடர்பில் இதுவரை பேசப்பட்டுள்ள விடயங்களைச் சுமந் திரன் உயர்ஆணையரிடம் விரிவாக எடுத்துரைத்தார். மூன்று பிரதான வேட்பாளர்களும் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவதாகக் கூறியிருக்கும் பின்னணியில், அதில் அமுல்படுத்தப்படாமல் இருக்கும் விடயங்கள், அவற்றை அமுல் படுத்துவதற்கு தற்போதைய ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகளை உள்ளடக்கி 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் தான் கையளித்த ஆவணம் குறித்தும் அதையொட்டி13ஆவதுதிருத்தத்தில் நடைமுறைப்படுத்தக்கூடிய விடயங்கள் குறித்து அண்மையில் ஜனாதிபதி கையளித்த ஆவணம் என்பன பற்றி உயர்ஆணையரிடம் விளக்கினார் சுமந்திரன், அவரிடம் அந்தஆவணத்தையும்காண்பித்தார்.

13ஆவது திருத்தத்தின் கீழ் விவசாயம், கல்வி, சுகாதாரம் உள்ளிட்டதுறைகளில்நிர்வாகரீதியாக வழங்கப்படக்கூடியஅதிகாரங்களை மீளளிப்பதுகுறித்துஜனாதிபதிபேசிய விடயங்களையும் எடுத்துரைத்தார் சுமந்திரன். அவ்வாறு பறிக்கப்பட்ட அதிகாரங்கள் மீளளிக்கப்படுவது மட்டும் முக்கியம் அல்ல, மீண்டும் அவை பறிக்கப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் அது தொடர்பான சட்டங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவேண்டும், உடனடியாக அதற்குச் சாத்தியம் இல்லை என்றால் அதைச் செய்வதாக நீங்கள் பகிரங்கமாக அறிவிக்கவேண்டும் என்பதைத் தான் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியிருக்கின்றார் என்பதையும் சுமந்திரன் தெளிவாக எடுத்துக் கூறினார்.

சுமந்திரனின் விளக்கங்களைச் செவிமடுத்த உயர்ஆணையர் சந்தோஷ் ஜா, இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் யாரை ஆதரிப்பது எனத் தீர்மானிப்பதற்கு முன்னர், அதிகாரப் பகிர்வு குறித்து அனைத்து வேட்பாளர்களுடனும் பேசி அதிகபட்ச இணக்கத்திற்கு அவர்கள் அனைவரையும் கொண்டு வருவது மிகச் சிறப்பான அணுகுமுறைஎன்றுபாராட்டினார். ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிக்க வேண்டும் என்பதை இப்போதைக்குத் தீர்மானிக்க வேண்டியதில்லை, அதனை இறுதியில் மேற்கொள்ளலாம் யார் சிறந்ததீர்வைமுன்வைக்கிறார்களோ அவர்களை நீங்கள் ஆதரிக்கலாம் என்றும் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இதே விடயத்தைத்தான் தான் பொதுவேட்பாளரை முன்னிறுத்தும் அரசியல்கட்சிகளுக்கும்எடுத்துரைத்திருக்கின்றார் என்பதையும் சுமந்திரனிடம் கூறினார்.

## மனுஷவுக்குப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டு பொது தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் காலி மாவட்ட விருப்புப் பட்டியலில் மனுஷ நாணயக்கார இரண்டாவது இடத்தைப் பெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவான நிலையில் அவரின் பதவி பறிக்கப்பட்டதால், விருப்புபட்டியலில் மூன்றாம் இடத்தைப் பெற்ற பந்துல லால் பண்டாரிகொடவுக்கு பாராளுமன்றம் நுழையும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் உறுப்பினராக ஹரின் பெர்னாண்டோ தெரிவு செய்யப்பட்டதன் காரணமாக அவரது வெற்றிடத்திற்கு ஐக்கிய மக்கள் கட்சி பொருத்தமான நபரை நியமிக்க வேண்டும்.

## ரிஷாத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க நேற்றுக் கையெழுத்திட்டார்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின்ஜனாதிபதிவேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கே தான் ஆதரவளிக்கிறார் என்றார்.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தீர்மானமிக்கது. 2019ஆம் ஆண்டு மக்களாணையுடன் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட ஆளும் தரப்பை நாட்டு மக்கள் ஜனநாயக ரீதியில் விரட்டியடித்தார்கள். பெரும் போராட்டத்துக்குப் பின்னர் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ளமை விசேட அம்சமாகும்.

75 ஆண்டுகால அரசியலை ஒருதரப்பினர் விமர்சிக்கிறார்கள்.நாட்டின் இலவச சுகாதாரம் மற்றும் இலவச கல்வியால்தான் நாடு முன்னேற்றமடைந்துள்ளது. 75 ஆண்டுகால அரசியலையும் விமர்சிக்கும்தரப்பினர்பொருளாதார நெருக்கடிக்குப் பொறுப்புக் கூறவேண்டும்.

மக்கள்விடுதலைமுன்னணியின் வன்முறையாலும்,விடுதலைபுலிகள் அமைப்பின் போராட்டத்தாலும் இலங்கை200பில்லியன்டொலரை இழந்துள்ளது.ஆகவேதற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மக்கள் விடுதலைமுன்னணியும்பொறுப்புக் கூறவேண்டும்.

மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியானவுடன் இந்த நாடு அவரது குடும்பசொத்துஎன்றநிலைப்பாட்டில் இருந்துசெயற்பட்டார்.குடும்பத்தாரின் ஊழல் மோசடிகளை அவர் கண்டுக்கொள்ளவில்லை.இறுதியில் நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது. ராஜபக்சக்கள் பொருளாதார படுகொலையாளிகள் என்றுஉயர்நீதிமன்றம்தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

பொருளாதார படுகொலையாளிகள்என்றுஉயர்நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டவர்களால் பொருளாதார நெருக்கடிக்கு ஒரு போதும்தீர்வுகாணமுடியாதுஎன்பதை நாட்டு மக்கள் அறிவுபூர்வமாக விளங்கிக்கொள்ளவேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைகள் நடைமுறைக்கு சாத்தியமற்றதாக உள்ளது. பொருளாதாரநெருக்கடிக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் அனைவரும் இன்று அவர் பக்கம் உள்ளார்கள்.

பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்புக்கூறவேண்டியவர்களுக்கு தண்டனைவழங்கவேண்டும்என்று மக்கள் குறிப்பிடுகிறார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மக்களின்தேவைகளைநிறைவேற்ற முடியாது.

கொள்கை அடிப்படையில் எதிர்க் கட்சித்தலைவர்சஜித்பிரேமதாசவுடன் ஒன்றிணைந்துள்ளோம். தேசியத்துக்காக ஒன்றிணைவோம் என்று நாங்கள் வெளியிட்ட கொள்கை திட்டத்தை எதிர்க் கட்சித் தலைவர் ஏற்றுக் கொண்டுள்ளார். நாட்டினதும், நாட்டு மக்களினதும் எதிர்காலத்துக்காக ஒன்றிணைந்துள்ளோம் என்றார்.

## இனப்படுகொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தளத்தில் தெரிவித்துள்ளார்.

''தமிழ் இனப்படுகொலை தொடர்பில் பொறுப்புக் கூறவேண்டிய குற்றவாளிகளை இலங்கை அரசாங்கம் ஹேக்நகரிலுள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் கையளிக்கும் வரை உண்மையான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பமுடியாது. இருப்பினும் இப்போர்க்குற் றவாளிகளை அவர்கள் இழைத்த மனிதகுலத்துக்கு எதிரான மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறச்செய்வதற்குப் பதிலாக, இலங்கை அரசு அவர்களைப் பாதுகாத்துவருகின்றது'' எனவும் மேயர் பற்றிக் பிரவுன்விசனம்வெளியிட்டுள்ளார்.

தமிழ் இனப்படுகொலை நினைவுத் தூபியை பிரம்டன் நகரில் நிறுவுவதற்கு புலம் பெயர் தமிழர்களால் மேற்கொள்ளப்படும் முயற்சி இலங்கையிலும், கனேடியவாழ் இலங்கையர்கள் மத்தியிலும் முன்னெடுக்கப்பட்டுவரும் நல்லிணக்க நடவடிக்கைகளில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் எனவும், ஆகவே இம்முயற்சிக்கு உதவ வேண்டாம் எனவும் வலியுறுத்தி பிரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுனுக்கு கனடாவின் டொரன்டோ நகரிலுள்ள இலங்கை கொன்சியூலர் நாயகம் துஷார ரொட்ரிகோ கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இக்கடிதத்தின் உள்ளடக்கத்துக்குப் பதிலளிக்கும் வகையில் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவு வெளியிட்டுள்ளார் மேயர்பற்றிக்பிரவுன், அதேபோன்று இலங்கையில் தமிழ் மக்கள் அவர்களது அன்புக்குரியவர்களை நினைவுகூருவதைத் தடுப்பதற்கு ஆளும்தரப்பு முயற்சித்தாலும், கனடாவில் அவர்களால் (இலங்கை அரசினால்) அதனைச் செய்யமுடியாது எனவும் அவர் குறிப்பிட்டார். அத்தோடு அவர்கள் கனடாவில்நினைவுகூரல்நிகழ்வைத் தடுப்பதற்கு முயன்றால் அது வெளிநாட்டுத் தலையீடாகவே அமையும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மைக் காலங்களில் இலங்கை ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும்வெளியக தலையீடுதொடர்பில்கனேடிய அரசு வலுவான நிலைப்பாடொன்றை எடுக்கும் என தான் எதிர்பார்க்கிறார் எனவும்பிரம்டன்நகரமேயர்பற்றிக் பிரவுன் தெரிவித்துள்ளார்.

இலங்கையினால் மேயருக்கு எழுதப்பட்டகடிதத்தில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கனேடியவாழ் இலங்கையர் குழுவொன்று உங்களது நிர்வாகத்தின்கீழ் உள்ள பிரம்டன் நகரில் தமிழினப்படுகொலை நினைவுத்தூபி எனக்கூறப்படும் சின்னத்தை நிர்மாணிப்பதற்கு உத்தேசித்திருப்பதாகவும், அதற்கு பிரம்டன் நகர கவுன்சில் அனுமதி அளித்திருப்பதாகவும் பல்வேறு கனேடிய இலங்கையர் அமைப்புக்கள் எமது அவதானத்துக்குக் கொண்டு வந்திருக்கின்றன.

அதிலும் குறிப்பாக எவ்வித இன, மதபேதங்களுமின்றி அனைத்து இலங்கையர்களும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், அவ்வாறிருக்கையில் இத்தகைய நினைவுத்தூபியை நிர்மாணிப்பது பாதிக்கப்பட்ட இலங்கையர்கள் மத்தியில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு முன்னெடுக்கப்படும் முயற்சிகளில் பின்னடைவை ஏற்படுத்தும் எனவும் அவ்வமைப்புக்கள் கரிசனை வெளியிட்டிருக்கின்றன. அதுமாத்திரமன்றி இந்நடவடிக்கையானது கனேடிய இலங்கையர் சமூகத்தினிடையேயான இனநல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாட்டிலும், இலங்கையின் பல்லின சமூகங்களுக்கு இடையிலான ஒற்றுமையிலும் எதிர்மறைத்தாக்கத்தைஏற்படுத்தும்.

அதேவேளை இலங்கையில் மூன்றுதசாப்தகாலமாக இடம்பெற்ற போரின்போது இனப்படுகொலை இடம்பெற்றமைக்கான ஆதாரங்கள் எவையும் ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட எந்தவொரு அமைப்புக்களினாலும்வெளியிடப்படவில்லை. யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் யுத்தத்தினால்பாதிக்கப்பட்டபகுதிகளில் வாழ்ந்த மக்களுக்கு அவசியமான அத்தியாவசியப்பொருட்களும், அரச கட்டமைப்புக்கள் இடையூறின்றி இயங்குவதற்கு அவசியமான நிதியும்இலங்கைஅரசாங்கத்தினால் வழங்கப்பட்டமை தெளிவாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று இலங்கையில் இலவசக்கல்வி, இலவச சுகாதாரம், ஏனைய அரச மற்றும் தனியார் சேவைகள் உள்ளிட்ட அனைத்தும் தமிழர்கள் உள்ளடங்கலாக சகலராலும்சமத்துவமானமுறையில் அனுபவிக்கப்படுகின்றன.

சர்வதேச ரீதியில் தடைசெய்

தொடர்ச்சி 9ம் பக்கம்...

காலைக்கதிர் Kalaikkathir

## இனப்படுகொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப்பட்ட அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடனான போர் 2009ஆம் ஆண்டு முடிவுக்குக்கொண்டுவரப்பட்டது. அதன்பின்னர் கொவிட் - 19 வைரஸ் பெருந்தொற்று, இயற்கை பேரிடர் உள்ளிட்ட பல்வேறு நெருக்கடிகளுக்கு இலங்கை முகங்கொடுத்தபோதிலும், போருக்கு அடிப்படையாக அமைந்த காரணிகளைக் களைந்து, அதன் பின்னரான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கே ஆளும் தரப்பு தொடர்ந்து முன்னுரிமை அளித்து வந்திருக்கின்றது.

எனவே தமிழர்கள் உள்ளடங்கலாக இலங்கையின் பல்லின சமூகங்களைப் பிரதிநிதித் துவப்படுத்தும் மக்களுக்கும், கனேடிய வாழ் இலங்கையர் களுக்கும் நன்மையளிக்கக் கூடியவகையில் முன்னெடுக்கப் பட்டுவரும் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பில் அவதானம் செலுத்துமாறும் உங்களிடம் கேட்டுக்கொள்கின்றேன். அத்தோடு தமிழினப்படுகொலை நினைவுத்தூபி நிர்மாணம் போன்ற பிரிவினைகளை ஏற்படுத்த வல்ல நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்குப் பதிலாக, இனங்களுக்கு இடை யிலான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதை முன்னிறுத்தி இலங்கையினால் மேற்கொள்ளப்பட்டுவரும் ஆக்கபூர்வமான முயற்சிகளுக்கு உதவுமாறும் உங்களிடம் வலியுறுத்துகின்றேன் என்று அக்கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

## சிகிரிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் 13 உள்ளூர் சுற்றுலாப் பயணிகளும் பாதிக்கப்பட்டனர். அங்குள்ள கிராமிய வைத்தியசாலையில் அவர்களுக்குச் சிகிச்சை வழங்கப்பட்டது.

அதிக வெயில் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பது என்பனதான் குளவிகள் கலைவதற்குக் காரணம் என சுற்றுலா வழிகாட்டிகள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் கருத்து தெரிவித்த மத்திய கலாசார நிதியத்தின் சீகிரிய திட்ட முகாமையாளர் துசித ஹேரத், குளவிகள் தாக்கிய நேரத்தில் சீகிரியாவை பார்வையிடுவதற்கு பயணச்சீட்டுகளை பெற்று உள்ளே செல்ல முடியாதவர்களின் பணத்தை மீள வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.


குளவிகளின் பாதிப்பு தணிந்தவுடன் சீகிரியாவை சுற்றுலாப் பயணிகளுக்கு திறக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

குளவிகளை விரட்ட நீராவி தெளிக்கும் முறை குறித்து தற்போது ஆய்வு செய்யப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# செஞ்சோலை படுகொலையின்: 18ஆம் ஆண்டு நினைவேந்தல்

## நினைவுச் சுடரேற்றி, மலர் தூவி அஞ்சலி





முல்லைத்தீவு - செஞ்சோலை வளாகத்தில் ஸ்ரீலங்கா இராணுவ விமானப்படையினரின் வான் தாக்குதலில் உயிரிழந்த மாணவர்களுக்கான நினைவேந்தல் நேற்று (புதன்கிழமை) அனுஷ்டிக்கப்பட்டது.



முல்லைத்தீவு - வள்ளிபுனம், இடைக்கட்டுபகுதியில் அமைந்துள்ள செஞ்சோலை வளாகத்தில் பயிற்சிக்காக சென்றிருந்த மாணவர்கள் மீது இலங்கை விமானப்படை நடத்திய தாக்குதலில் உயிரிழந்த பாடசாலை மாணவர்கள் 53 பேர் மற்றும் பணியாளர்கள் 4 பேரினதும் 18ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வான் தாக்குதல் இடம்பெற்ற இடத்தில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

2006.08.14 அன்று வள்ளிபுனம் - இடைக்கட்டு பகுதியில் உள்ள செஞ்சோலை வளாகத்தில் விமானத் தாக்குதல் இடம்பெற்ற நேரத்தில் இன்றைய தினம் நினைவேந்தல் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக சுடரேற்றி, அக வணக்கம் செலுத்தி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வில் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உறுப்பினர் குகன், இளைஞர்கள், பொதுமக்கள், சமூக செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (05)




## மாணவர்களின் சிறுவர் சந்தை





(எம். எப். றிபாஸ்)

நிந்தவூர் அல்-மினா பாலர் பாடசாலை மாணவர்களின் சிறுவர் சந்தை நிகழ்வு பாடசாலையில் நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு நிந்தவூர் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் எம்.ஏ.எம்.தாஹிர் பிரதம அதிதியாகவும் சமூக செயற்பாட்டாளரும், ஹிக்மா விளையாட்டு கழகத்தின் தலைவருமான ஜ.எல்.எம். ஜாபிர், இலங்கை தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட விரிவாக்கள் உத்தியோகத்தர் ஹாரூன் அம்ஜத் அலி உட்பட மாணவர்களின் பெற்றோர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மாணவர்களினால் சிறிய கடைத்தொகுதி அமைக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் பிரதம அதிதியினால் மாணவர்களுக்கு பரிசுப்



பொருள்களும் வழங்கி வைக்கப்பட்டது. (05)

## திருக்கோவிலில் மாவட்டமட்ட தமிழ் மொழித்தினப் போட்டி

(வி.ரி.சகாதேவராஜா)

அகில இலங்கை தமிழ் மொழித்தின போட்டிக்கான கல்முனைக்கல்வி மாவட்ட நிலை போட்டி இன்று (வியாழக்கிழமை) திருக்கோவில் வலயத்திலுள்ள தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற உள்ளது .

திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் இரா.உதயகுமார் தலைமையில் நடைபெற இருக்கின்ற இந்த நிகழ்வில் சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேந்திரகுமார், கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம், அக்கரைப்பற்று வலயக்கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றஹ்மத்துள்ளா ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

காலை 8 மணிக்கு தமிழ்மொழி தின பண்பாட்டு ஊர்வலம் இடம்பெற இருக்கின்றது .அதன் பிறகு ஏனைய நிகழ்வுகள் ஒன்றன் பின் ஒன்றாக இடம்பெறும். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# கட்சி எடுக்கும் முடிவுக்குக் கட்டுப்பட: இ.ம.காங்கிரஸ் கல்குடா கிளை முடிவு





(எச்.எம்.எம்.பர்ஸான்)

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிப்பதென்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி எடுக்கும் முடிவுக்கு கட்டுப்படுவோம் என்று கல்குடா தொகுதி ஆதரவாளர்கள் தங்களது கைகளை உயர்த்தி உறுதிமொழி அளித்தனர்.

ஜனாதிபதித் தேர்தலில் நாம் யாரை ஆதரிக்க வேண்டும் என்று கல்குடா தொகுதி மக்களின் கருத்துக்களை கேட்டறியும் நிகழ்வு திங்கட்கிழமை ஓட்டமாவடி - மீராவோடை அமீர் அலி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தவிசாளரும் முன்னாள் பிரதி அமைச்சருமான எம்.எஸ்.எஸ். அமீர் அலி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கலந்து கொண்டு மக்களின் கருத்துக்களைக் கேட்டறிந்தார்.

அங்கு நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் உரையாற்றும் போது -

எதிர்காலத்தில் நாம் ஆதரிக்கும், வெற்றிபெற விருக்கும் ஜனாதிபதி நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்கின்றவராகவும், பொருளாதாரத்தை மேம்படுத்துகின்றவராகவும், இனவாத, மதவாத சக்திகளின் கை ஓங்கிவிடாமல் அதற்கு உரிய தண்டனைகளை வழங்கும் சட்டத்தைக் கொண்டு வந்து சட்டரீதியாக அவர்களை கட்டுப்படுத்துகின்ற ஒரு ஜனாதிபதி வரவேண்டும் என்று எமது கட்சி சிந்திக்கிறது.

அந்தவகையில், கட்சி ஆலோசனைகளைப் பெற்று யாரை ஆதரிப்பது என்று முடிவை அறிவிக்கும் போது அதற்கு நீங்கள் அனைவரும் கட்டுப்பட வேண்டும். அதற்கு உடன்பட வேண்டும் என்று ரிஷாத் பதியுதீன் கேட்டதற்கு ஆதரவாளர்கள் கட்டுப்படுவதாக உறுதிமொழி அளித்தனர். (05)

# பார ஊர்தி மற்றும் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

(பாறுக்ஷிஹான்,எஸ்.அஷ்ரப்கான்)

பார ஊர்தி மற்றும் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கல்முனை அஸ்ரப்ஞாபகார்த்தவைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் மரணமானார்.

இந்தச் சம்பவம் அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அல்ஹிலால்பாடசாலை முன்பாக நேற்று (புதன்கிழமை) காலை இடம்பெற்றது.

இதன் போது குறித்த இரு வாகனங்களும் நேருக்கு நேர் மோதியுள்ளதுடன்மோட்டார்சைக்கிளில் பயணம்செய்தசம்மாந்துறைபகுதியை சேர்ந்த குடும்பஸ்தர் இவ்விபத்தில்படுகாயமடைந்தநிலையில்சிகிச்சைக்காக கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்தச்சம்பவம்தொடர்பில்சாய்ந்தமருது போக்குவரத்து பொறுப்பதிகாரி தலைமையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05)

# கோணேஸ்வர விவகாரத்தில் குழப்பத்தை ஏற்படுத்தாதீர்

## கிழக்கு ஆளுநரிடம் கஜேந்திரன் எம்.பி. வலியுறுத்து

திருகோணமலையில்திருக்கோணேச்சரத்தின் விவகாரத்தில் அப்பட்டமான விடயங்களை கூறி நிர்வாகத்தை கலைத்துஇடைக்காலநிருவாகம்ஊடாக தாங்களும்இணைந்துசெயற்படுவதற்கு கிழக்கு ஆளுநர் முயற்சிப்பதை உடன் நிறுத்த வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அப்பட்டமான விடயங்களைக் கூறி பேரினவாத சக்திகளுக்கும் திருகோணமலை திருக்கோணேஸ்வர ஆலயத்தில்தலையிடவேண்டாம்.தமிழ் மக்களின் இருப்பை பாதுகாருங்கள் மக்கள் காணிக்குள் சட்டவிரோதமாக பௌத்த விகாரைகளைகளையும் அமைக்கின்றனர். இதனை தடுத்து நிறுத்த முடியாமல் இருக்கும் கிழக்கு ஆளுநர் இந்த விவகாரத்தில் தலையிட வேண்டாம். நிர்வாகசபை அதற்குதான் உள்ளது. - என்றும் அவர் மேலும் தெரிவித்தார்..(05)

# இனத்தின் இருப்பைத் தக்கவைப்பதில் கலைஞர்களின் பணி காத்திரமானது

## சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு





மாமனிதர் செல்லத்துரை குமாரசாமியின் முதலாம் ஆண்டு நினைவேந்தலும் திருவுருவச்சிலை திறப்பும் அண்மையில் யாழ்.உடுப்பிட்டியில் நடைபெற்றிருந்தது.

அந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், அன்னாரது திருவுருவச் சிலையை திரைநீக்கம் செய்ததுடன், 'குமாரசாமி இசைத்தமிழ்க் கழகம்' என்னும் இசைக் கல்லூரியையும்சம்பிரதாயபூர்வமாகதிறந்துவைத்து உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -



ஒருசமூகத்தின்அகஉணர்வுகளை, அகப்புறச் சூழலின் தாக்கங்களை, யதார்த்தப் புற நிலைகளை, காலப்பிரவாகத்தை, வரலாற்றை, கடந்துவந்தபாதைகளை, அச்சமூகத்தின் உண்மை உணர்வுகளை பதிவு செய்வதிலும், அடுத்த தலைமுறைக்கு அவற்றின் அடிமுறை பிறழாது கடத்துவதிலும் கலை எனும் ஊடகமே முன்னணி வகிக்கிறது. அந்த அடிப்படையில், எமது மக்களின் தேசவிடுதலைக் கனவைச் சுமந்து நிகழ்ந்தேறிய போரின் தாற்பரியத்தை, அதன்பாலிருந்த நியாயத்தை, அடக்குமுறையாளர்களால்எமது மக்கள் எதிர்கொண்ட அவலங்களை வெளிக்கொணரும் பணிக்கு கால்கோளாக இருந்த 'தமிழீழ எழுச்சிப் பாடல்களின்' மறக்கவியலாத குரலாக மாமனிதர் குமாரசாமி ஐயாவின் குரல் ஈழத்தமிழர்களின் மனங்களெங்கனும்நிறைந்தே இருக்கும். - என்றார்.

இழந்துபோனதமது இறைமையை நிலைநாட்டி, இலங்கைத்தீவில்தமது இருப்பைமீளநிலைநிறுத்தப் போராடும் ஈழத்தமிழினத்தின் வரலாற்றில், கலைஞர்களின் பணிகள் மிகக் காத்திரமான இடத்தைப் பெறுகின்றன என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

'பூத்தகொடி பூக்களின்றித் தவிக்கின்றது', 'போரம்மா உன்னையன்றி யாரம்மா' உள்ளிட்ட எழுச்சிப்பாடல்களினதுகுரலாகவும்,யாழ்ப்பாணத்தின் பெருமளவு ஆலயங்களின் சிறப்பைப் பாடிய பக்தியின் குரலாகவும் தாயக இசைத்துறை வரலாற்றில்தனியிடம்பெற்றிருந்த, கரவைக்குமரன்,

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் அவர்களது தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கலைஞர்கள், இசை ஆர்வலர்கள், அன்னாரது குடும்பத்தினர், கரவெட்டிப் பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05 - 113)

# ரணிலின் பேஸ்புக் பக்கத்தில் சட்டவிரோதச் செயல்களாம்

## நீதிக்கான மையம் தேர்தல் ஆணையத்திடம் முறைப்பாடு

(எஸ்.ஏ.கான்)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ள தற்போதைய ஜனாதிபதியின்உத்தியோபூர்வமுகநூல் பக்கத்தில் பல்வேறு சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறுகின்றன என இலங்கை நீதிக்கான மய்யம் தேர்தல் ஆணையத்திற்கு முறைப்பாடு ஒன்றை செய்துள்ளது.

குறித்த முறைப்பாட்டில் ஜனாதிபதி அவர்களின் உத்தியோபூர்வ முகநூல் பக்கத்தில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி முகப்புத்தக இடுக்கைகளுக்கான (post) View, Comment, Like போன்றவற்றைசெயற்கையான முறையில் அதிகரிக்க போட்கள் (bots) ஈடுபடுத்தப்பட்டுள்ளதாககுறித்தமுறைப்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறானView,Comment,Like என்பனபோலிமுகநூல்கணக்குகளை கொண்டு உருவாக்கப்படுகின்றன. இச் செயற்பாடானது வாக்காளர் மத்தியில் குறித்த ஜனாதிபதி வேட்பாளருக்கு அதிகமான ஆதரவு இருப்பதாக ஒரு தவறானபுரிதலைஏற்படுத்துவதால்இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என இலங்கை நீதிக்கான மய்யம் தேர்தல்ஆணையத்தைகோரிஉள்ளது.

செயற்கை நுண்ணறிவினை இவ்வாறுபயன்படுத்துவதுபேஸ்புக்நிறுவனத்தின் சமூக தரநிலைகள் (Community Standards) மற்றும் இலங்கை ஜனாதிபதி தேர்தல் சட்டத்தின்ஏற்பாடுகளை மீறுவதாகவும் அமைந்துள்ளதாக இலங்கை நீதிக்கான மய்யம் சுட்டிக்காட்டி உள்ளது.

இவ்வாறான செயற்பாடுகள் ஒரு சிறந்த நியாயமான தேர்தல் ஒன்றை இந் நாட்டு மக்கள் சந்திப்பதற்கும் தங்களுக்கு விரும்பிய வேட்பாளரை தேர்வு செய்வதற்கான உரிமையை மட்டுப்படுத்துவதாகவும்அமைந்துள்ளது என இலங்கை நீதிக்கான மய்யம் குறித்த முறைப்பாட்டில் கூறியுள்ளது. (05)

# ஓட்டோ - வான் மோதி விபத்து



ஓட்டோவுடன்வான்மோதிவிபத்துக் குள்ளாகியுள்ளதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என இரட்டைபெரியகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்தானது வவுனியா, நவகமுவ பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அநுராதபுரத்தில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த வான் ஒன்று, வவுனியாவில்இருந்து அநுராதபுரத்தை நோக்கி பயணித்தஓட்டோவுடன் மோதியே குறித்த விபத்துஇடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் ஓட்டோவில் பயணித்த இருவரும் படுகாயமடைந்த நிலையில்வவுனியாவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைவவுனியாபொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# தாய் மாமன் இழந்த கவலையில் தவறான முடிவெடுத்த மருமகன்

யாழில் தாய்மாமன் உயிரிழந்த சோகத்தில் மருமகன் ஒருவர் செவ்வாய்க்கிழமை தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஆறுகால்மடம் பகுதியைச் சேர்ந்த இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

குறித்த இளைஞனின் தாய்மாமன் கடந்த 5 மாதங்களுக்கு முன்னர் உயிரிழந்துள்ளார். இந்நிலையில் குறித்த இளைஞன் மனவிரக்தியில் இருந்துள்ளார். இந்நிலையில், செவ்வாய்க்கிழமை தவறான முடிவெடுத்து, வீட்டுக்கு பின்னால் உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(05)

# யாழில் திருட்டில் ஈடுபடும் நபரின் காணொளி பொலிஸால் வெளியீடு



யாழில் பல்வேறு பகுதிகளிலும் உள்ள வீடுகளுக்குள் புகுந்து தொடர் திருட்டுக்களில் ஈடுபட்டு வந்த நபர் தொடர்பான சிசிரிவி காணொளிகளை பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

யாழ் மாவட்டத்தின் நல்லூர், மானிப்பாய், கோப்பாய், உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் அண்மைக் காலமாக தொடர் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இத் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருக்கிற நிலையில் அவை தொடர்பில் தீவிர விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்வாறானநிலையில், சிலதினங்களிற்கு முன்னர் வீடொன்றில் பதிவான சிசிரிவி காணொளிகளில் நபர் ஒருவர் திருட்டில் ஈடுபடும் காட்சிகள் பதிவாகியுள்ளன.

இதனால் ==குறித்த நபர் தொடர்பில் தகவல் தெரிந்தால் உடனடியாக தமக்கு அறிவிக்குமாறு கேட்டுள்ள பொலிஸார், அவ்வாறு தகவல் கொடுப்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படுமெனவும் அறிவித்துள்ளனர். (05)

# தென்மராட்சியில் சட்டவிரோதமாக மண் ஏற்றிச்சென்ற இருவர் கைது

யாழ்.தென்மராட்சி கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எழுதுமட்டுவாள் பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்ற இரண்டு டிப்பர் வாகனங்கள் கொடிகாமம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொடிகாமம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய கொடிகாமம் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரியான பிரதான பொலிஸ் பரிசோதகர் சிவலிங்கம் பிரபாகரனின் தலைமையில் கீழ் கொடிகாமம் பொலிஸ் நிலைய நிர்வாகப் பிரிவு பொறுப்பதிகாரியான தினேஸ் குணதிலகவுடன் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் அதிகாரிகளான எஸ்.ஐ.டிலான் சேமசிங்க, வியஜரட்ன மற்றும் தேவதாஸ் ஆகியோரால் குறித்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் கிளாலி பகுதியிலிருந்து கொடிகாமம் நோக்கி சட்டவிரோத மணலுடன் சென்று கொண்டிருந்த டிப்பர் வாகனங்களே பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட இரு சந்தேகநபர்களும் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

# 1700 ரூபா சம்பள விடயம் தேர்தல் கால வாக்குறுதியாக இருந்து விடக்கூடாது

## சோ. ஸ்ரீதரன் தெரிவிப்பு



(க.கிஷாந்தன்)

தோட்டத் தொழிலாளர்களுக்கான 1700 ரூபா சம்பளமானது தேர்தல் கால வாக்குறுதியாக இருந்து விடக்கூடாது என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் நிதிச் செயலாளரும், மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான சோ.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளமாக 1350 ரூபாவும் வருகை மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனமாக 350 ரூபாவும் வழங்குவதற்கு சம்பளம் நிர்ணய சபையின் ஊடாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் தொடர்பில் எதிர்வரும் 14 நாள்களுக்குள் தமது ஆட்சேபனையைத் தெரிவிக்கலாம் எனவும் தொழிற் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதேவேளை 1350 ரூபா அடிப்படைச் சம்பளத்தை வழங்க முடியும் என்று தோட்ட முதலாளிமார் சம்மேளனமும் அறிவித்துள்ளது.

மேலும் தோட்ட முதலாளிமார் சம்மேளனம் முன் வைத்துள்ள நிபந்தனைகளை ஏற்க முடியாது என்று அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம் ஆட்சேபனைத் தெரிவித்து வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லையெனவும் தெரிய வருகின்றது.

மேலும் சம்பள நிர்ணய சபையின் தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்த சில தொழிற்சங்கங்கள் தோட்டத் தொழிலாளர்களின் 1700 ரூபா சம்பளத்திற்காக தொடர்ந்து குரல் கொடுப்பதாகவும் ஊடக அறிக்கை வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில் தேர்தல் கண்காணிப்பு குழு ஒன்றும் சம்பள நிர்ணய சபையின் தீர்மானம் குறித்து தேர்தல் ஆணைக்குழுவின் கவனத்துக்கு கொண்டு வரப்படும் என்றும் அறிவித்துள்ளது.

ஆகவே இவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும் போது தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பளம் கிடைக்குமா என்பதில் சந்தேகம் எழுந்துள்ளது.

மேலும் இந்தப் புதிய சம்பள திட்டம் உடனடியாக நடைமுறைப்படுத்தும் பட்சத்தில் தோட்டத் தொழிலாளர்களின் செப்ரெம்பர் மாதச் சம்பள பட்டியலில் உள்ளடக்கும் வகையில் குறிப்பிட்ட தொழிற்சங்கங்கள் உறுதி செய்யப்பட வேண்டும்.

ஆகவே தோட்டத் தொழிலாளருக்கான 1700 ரூபா சம்பளம் விடயமானது தேர்தல் கால வாக்குறுதியாக இருந்து விடக் கூடாது. இவ்வாறு இருக்கும் பட்சத்தில் அது தோட்டத் தொழிலாளர்களுக்கு செய்யப்படுகின்ற மேலுமொரு அநீதி ஆகும். - என்று சோ. ஸ்ரீதரன் மேலும் தெரிவித்தார்.(05)

# யாழ். சேந்தாங்குளத்தில் மோதல்: வாடிகள், படகுகளுக்கு தீ வைப்பு



யாழ்ப்பாணம் சேந்தாங்குளம் பகுதியில் இடம்பெற்ற வன்முறை சம்பவத்தில் 03 படகுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

சேந்தாங்குளம் கடற்கரையில் செவ்வாய்க்கிழமை இரவு இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறியதை அடுத்து, கடற்கரையில் இருந்த மீன் வாடி மற்றும் படகுகளுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது.

அதில் வாடிகள் சிலஎரிந்த நிலையில், மூன்று படகுகள் தீக்கிரையாகியுள்ளன.

படகுகள் மற்றும் வாடிகளுக்கு தீ வைக்கப்பட்டதை அடுத்து, ஊரவர்கள் ஒன்று கூடி, தீயை அணைத்ததுடன், சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸாருக்கு அறிவித்தனர். மோதலில் ஈடுபட்ட இரு தரப்பினரும் தப்பி சென்றுள்ள நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

# வெளிநாட்டு சிகரெட்டுகளை விற்றவர் யாழில் கைதானார்

யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டு சிகரெட்களை விற்பனை செய்த பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாடுகளில் இருந்து சட்டவிரோதமான முறையில், வரிகள் செலுத்தப்படாது நாட்டிற்குள் கொண்டுவரப்பட்ட சிகரெட்டுகளை விற்பனை செய்த குற்றச்சாட்டின் கீழே குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண்ணிடம் இருந்து 240 சிகரெட்களை மீட்டுள்ளதாகவும், மேலதிக விசாரணைகளின் பின்னர் பெண்ணை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

# மேல் கொத்மலை நீர்தேக்கத்திலிருந்து இளைஞன் ஒருவரின் சடலம் மீட்பு





மேல் கொத்மலை நீர்தேக்கத்திலிருந்து இளைஞனின் சடலம் ஒன்று நேற்று (புதன்கிழமை) மீட்கப்பட்டுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது -

சடலமாக மீட்கப்பட்ட இளைஞன் திங்கட்கிழமை காணாமல்போயுள்ளார்.

குறித்த நபரை தேடும் நடவடிக்கையில் உறவினர்கள் ஈடுபட்ட போதும் அவர் தொடர்பில் எந்த தகவலும் கிடைக்க வில்லை.

அதன் பிறகு செவ்வாய்க்கிழமை தலவாக்கலை பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்திருந்தனர்.

இந்நிலையிலேயே குறித்த இளைஞன் நேற்று சடலமாக மேல் கொத்மலை நீர்தேக்கத்தில் மிதந்த நிலையில் காணப்பட்டதை இப்பிரதேசவாசிகள் கண்டு தலவாக்கலை பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

அதனையடுத்து, பொலிஸாரால் சடலமாக மீட்கப்பட்ட இளைஞன் தலவாக்கலை மேற்பிரிவு தோட்டப்பகுதியைச் சேர்ந்த 24 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

குறித்த சடலம் சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# திருகோணமலை, குச்சவெளி, இலந்தைக்குளம் பகுதியில் விகாரை அமைக்கக் காணி துப்புரவு

## அரச அதிகாரிகள் நேரில் சென்று பார்வை

திருகோணமலை, குச்சவெளி இலந்தைக்குளம் பகுதியில் விகாரைக்காக அத்துமீறி துப்புரவு செய்யப்பட்ட மக்களுடைய காணிகளை திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர், குச்சவெளி பிரதேச செயலாளர் உள்ளிட்ட அரச அதிகாரிகள் செவ்வாய்க்கிழமை அவ்விடத்திற்கு நேரடியாக விஜயம் மேற்கொண்டு பார்வையிட்டனர்.





இதன்போது, மக்களுடைய காணிக்குரிய ஆவணங்கள் ஆராயப்பட்டதுடன், குறித்த மக்களுடைய காணிகளை விடுவிப்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும், சம்பந்தப்பட்ட விகாராதிபதியுடனும் கலந்துரையாடி விரைவில் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தனர்.

குச்சவெளி - இலந்தைக்குளம் 5ஆம் கட்டைப்பகுதியில் கடந்த மாதம் 25ஆம் திகதி இரவில் இருந்து பௌத்த பிக்கு ஒருவரின் தலைமையில் புத்த விகாரை அமைப்பதற்காக மக்களுடைய காணி துப்பரவு செய்யப்பட்டு வந்த நிலையில் குச்சவெளி பிரதேச செயலாளரின் கவனத்திற்கு குறித்த விடயம் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து குறித்த விடயம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட உயர்மட்ட அரச அதிகாரிகளுடைய கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டிருந்தது.

இலந்தைக்குளம் பகுதியில் காலாகாலமாக வாழ்ந்து வந்த மக்கள் யுத்தத்தின் காரணமாக 1990ஆம் ஆண்டு மற்றும் அதனை அண்டிய காலப்பகுதிகளில் இடம்பெயர்ந்திருந்தனர் எனவும், பின்னர் அப்பகுதியில் மீள குடியமர்வதற்கான கோரிக்கையை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் நீண்டகாலமாக முன்வைத்து வந்தபோதும் மக்கள் மீள குடியமர்த்தப்படாத நிலையில் அப்பகுதி பௌத்த விகாரைக்காக ஆக்கிரமிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.



(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.08.2024இல் வெளியிடப்பெற்றது